# அவள் இல்லாத உலகம் ?



## முறைசாரா பொருளாதார துறையிலுள்ள பெண்களை வலுவூட்டல் : ஒரு மனித உரிமைகள் நிகழ்ச்சி நிரல்

**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**

**2018 சர்வதேச மகளிர் தினம்**

# முறைசாரா பொருளாதார துறையிலுள்ள பெண்களை வலுவூட்டல்:
# ஒரு மனித உரிமைகள் நிகழ்ச்சி நிரல்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

2018 சர்வதேச மனித உரிமைகள் தினம்

**பொருளடக்கம்**

| | | |
|---|---|---|
| 1.0 | அறிமுகம் | 02 |
| 2.0 | தலைமைக்காரியாலய வட்டமேசை கலந்துரையாடல் - முதன்மைக் கருத்துரைகள் | 03 |
| 2.1 | பிரதேச காரியலயத்தின் நிகழ்வுகள் | 17 |
| 2.1.1 | அனுராதபுரம் பிராந்திய காரியாலயம் | 17 |
| 2.1.2 | பதுளை பிராந்திய காரியாலயம் | 21 |
| 2.1.3 | மட்டக்களப்பு பிராந்திய காரியாலயம் | 23 |
| 2.1.4 | அம்பாறை பிராந்திய காரியாலயம் | 26 |
| 2.1.5 | திருகோணமலை பிராந்திய காரியாலயம் | 27 |
| 2.1.6 | கல்முனை பிராந்திய காரியாலயம் | 29 |
| 2.1.7 | மாத்தறை பிராந்திய காரியாலயம் | 31 |
| 2.1.8 | யாழ்ப்பாணப் பிராந்திய காரியாலயம் | 33 |
| 2.1.9 | கண்டி பிராந்திய காரியாலயம் | 35 |
| 3.0 | முறைசாரா தொழில்துறையிலுள்ள பெண்களின் பொதுப்பிரச்சினைகள்/ சவால்கள் - பொது இணங்காணலும் முடிவுரையும் | 37 |
| 4.0 | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் பரிந்துரைகள் | 42 |
| இணைப்பு I: | இலங்கையில் பெண் தொழிற்படையின் பங்களிப்பு | 45 |
| இணைப்பு II : | சர்வதேச பெண்கள் தின வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் | 51 |

## 1.0 அறிமுகம்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது 2016 ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தினை ''அவளில்லாத உலகம்'' என்ற தலைப்பில் ஒழுங்கு செய்திருந்ததுடன் கிராமிய பெண்களின் பிரச்சனைகள் தொடர்பாக செயற்படுகின்ற பிரதேச பெண்கள் 8 பேர் தமது கருத்துக்களை தேசிய மட்டத்தில் பகிர்ந்துகொள்ள அவர்களிற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

அவ்நிகழ்வின் தொடர்ச்சியாக 2017 ஆண்டும் அதே தலைப்பில் சர்வதேச மகளிர் தினத்திற்கு ஒத்ததாக வட்டமேசை கலந்துரையாடல் ஒன்றினை முறைசாரா தொழில்துறையில் ஈடுபடுகின்ற பெண்கள் முகங்கொடுக்கும் பிரச்சனைகள் தொடர்பில் கலந்துரையாடி அத்துறையுடன் தொடர்புடைய அதிகாரவமைப்புகளிற்கு தெரியப்படுத்தவும் அது தொடர்பாக கொள்கை தீர்மானத்தினை எடுப்பதற்கு அரசிற்கு தெரியப்படுத்தவுமாக ஏற்பாடு செய்யப்பட்டது.

அதன் அடிப்படையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பிரதான காரியாலயம் மற்றும் 10 பிராந்திய நிலையங்களின் ஊடாக ''அவளில்லாத உலகம்'' எனும் தொனிப்பொருளின் கீழ் விவசாயத்துறை, பல்வேறு சிறுகைத்தொழில் துறை பல்வேறு முறைசாரா பொருளாதார துறையில் உள்ள பெண்கள் தமது தொழில்துறையில் முகங்கொடுக்கும் சவால்கள், பிரச்சினைகள் மற்றும் அடைவுகள் தொடர்பாக கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தனர். இதன்போது பிரதான கவனம் முறைசாரா பொருளாதாரதுறைக்கு செலுத்தப்பட்டதுடன் அதேபோல சில முறைசார் துறைகளான சுதந்திர வர்த்தக வலய பெண் தொழிலாளர்கள், தோட்டத்துறை தொழிலாளர்கள் மற்றும் புலம்பெயர் பெண் தொழிலாளர்கள் உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்ச்சியாக இடம்பெறுவதனாலும் அப்பிரச்சினைகளுக்கு உரிய முறையில் அவ்வாறான துறையிலுள்ள குறைப்பாடுகளை கட்டுப்படுத்தி அத்துறைகள் தொடர்பாகவும் எங்களுடைய அவதானத்தை செலுத்தியுள்ளோம். இந்த வட்டமேசை கலந்துரையாடலுக்காக அரசாங்க அதிகாரிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களை நாம் அழைத்ததுடன் அவர்களும் அங்கே தமது கருத்துக்களை வழங்கினர்.

அந்த வட்டமேசை கலந்துரையாடல் மற்றும் பிராந்திய காரியாலயம் ஊடாக இடம்பெற்ற வட்டமேசை கலந்துரையாடலில் முறைசார் பொருளாதாரதுறையில் உள்ள பெண்கள், அனைத்து அரசாங்க அமைப்புக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் முறைசார் பொருளாதாரதுறையிலுள்ள பெண்களின் உரிமைகள் உறுதிப்படுத்துவதன் ஊடாக முன்னேற்றத்தை ஏற்படுத்துதல், தொடர்புடைய அரசாங்க நிறுவனத்திற்கு 1996ம் ஆண்டின் 21ம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 10 மற்றும் 11 உடன் வழங்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதன்போது ஆணைக்குழுவின் பிரதான நோக்கம் என்னவெனில் அரசாங்க நிறுவனங்களுடன் தொடர்புடைய கொள்கை வகுப்பாக்கங்கள் மேற்கொள்ளும் போது அதனை கவனத்திற் கொள்ள வைப்பதுடன் முறைசாரா பொருளாதாரதுறையிலுள்ள பெண்களை முன்னேற்றமடைய வைப்பதாகும்.

**2.0 தலைமைக்காரியாலய வட்டமேசை கலந்துரையாடல் - முதன்மைக் கருத்துரைகள்**

சர்வதேச மகளிர் தின பிரதான நிகழ்வு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதான காரியாலயத்தின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டதுடன் அது கொழும்பு 07, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திலுள்ள பண்டாரநாயக்கா சர்வதேச கற்கைகள் நிலையத்தில் இடம்பெற்றதுடன் இதன்போது பிரதம விருந்தினராக முன்னாள் ஜனாதிபதி **கௌரவ திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க** பங்கு கொண்டார். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வழிகாட்டலுக்கு அமைய முறைசாரா பொருளாதாரதுறையிலுள்ள பெண்கள் மற்றும் அதையொத்த தொழில்துறையிலுள்ள பெண்கள் இந்நிகழ்வில் பங்கு கொண்டதுடன் அவர்களின் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது.

இந்த வட்ட மேசை கலந்துரையாடல் பல்வேறு அரசாங்க நிறுவனங்களான அமைச்சுக்கள், அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார் வங்கிகளின் பிரதிநிதிகள், அறிஞர்கள், உயர்ஸ்தானிகள், உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகள், ஐக்கிய நாடுகளின் முகவர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரிதிநிதிகள் பங்கு கொண்டனர்.

சர்வதேச மகளிர் தின பிரதான நிகழ்விற்கு வருகைதந்த பங்குபற்றுனர்களை வரவேற்றதுடன் நிகழ்வு தொடர்பான அறிமுகத்தினையும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் **தவிசாளர் கலாநிதி தீபிகா** உடகம அவர்கள் மேற்கொண்டார்.

இதன்போது அவர் கவனத்திற் கொண்டுவந்தமையானது எல்லோரும் மனித வர்க்கமாக வகைப்படுத்தப்பட்டதுடன் அனைவரும் கௌரவமாக வாழ்வதற்குரிய உரிமை உறுதிப்படுத்தப்படல் வேண்டும். வீட்டிற்கு வெளியே வேலை செய்யும் பெண்கள் பலரை சமூகத்தில் காணக்கூடியதாகவுள்ளது. கடந்த வருடம் மகளிர் தினத்தின் போது கிராமிய மக்கள் தலைவிகளுடன் கருத்துக்கனை பரிமாறிய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு இவ்வாண்டு நாட்டில் பொருளாதாரத்தில் பெருமளவில் பங்களிக்கும் முறைசாரா பொருளாதார துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் பெண்களின் வாழ்க்கை பிரச்சினை, சவால்கள் அடைவுகள் சம்பந்தமாக கருத்துக்களை பகிர்கின்றனர். இது சம்பந்தமாக கொள்கை வகுப்பாளர்களின் கவனத்திற்கு கொண்டு செல்வதே பிரதான நோக்கமாகும் என தெரிவித்தார். இலங்கையில் பெண்கள் இரு துருவங்களிடையே வாழுகின்றமை காணக்கூடியதாகவுள்ளது. எனினும் சில பிரிவுகளில் மிகப்பெரிய

வெற்றிகளை பெற்றுள்ள பெண்கள் மற்றைய பிரிவுகளில் பாரம்பரியங்களினால் கட்டுப்பட்டு வாழ்கின்றனர்.

பெண்கள் கல்வித்துறையில் அடைந்துள்ள வெற்றி மிகவும் விஷேடமானது. அதேபோல மகப்பேற்று சுகாதாரதுறையில் இலங்கை முன்னிலையில் உள்ளது. இருப்பினும் உயர் கல்வியை முடித்த பெண்கள் அதன் பின்னர் பொது வாழ்க்கையில் குறிப்பாக தொழில்துறையில் காணாமற் போகின்றமையை காணக்கூடியதாகவுள்ளது.

2012 புள்ளிவிபரப்படி இலங்கையில் தொழிற்துறையில் பெண்கள் பங்களிப்பு 35% மட்டுமேயாகும். எனினும் 60% மானோர் பல்கலைக்கழகங்களுக்கு செல்கின்றனர். அப்படியாயின் அத்தகையோர் பொருளாதாரத்திற்கு மற்றும் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் செய்யும் பங்களிப்பு தெளிவில்லாததுடன் உறுதியாக தீர்மானிக்க முடியாதுமுள்ளது.

அதிகளவான பெண்கள் பங்களிப்பு முறைசாரா பொருளாதாரதுறையில் காணக்கூடியதாகவுள்ளது. இதில் தொழிலாளர் உரிமை தொடர்பான நிலைமை மகிழ்ச்சியடையக் கூடிய மட்டத்தில் இல்லை. ஆகவே பொருளாதாரத்தின் முள்ளந்தண்டாகவுள்ள இந்தப் பெண் தோட்டத்தொழிலாளர்களாக மற்றும் கைத்தொழில்சாலைகளில் வேலை செய்வதுடன் குறைந்த சம்பளத்துக்கு உழைப்பை வழங்குகின்றனர்.

மேலும் பெண்களிற்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகம் இலங்கையிலும் அதிகளவில் காணக்கூடியதாகவுள்ளது. பொது போக்குவரத்து சேவை, வேலைத்தளங்களில் அதிகளவில் காணக்கூடியதாகவுள்ளதுடன் பெண்களுக்கு எதிரான சமூக மனநிலை இந்த துறையில் அதிகமாக காணப்படுகிறது. உதாரணமாக ஆண்களிலும் பார்க்க பெண்வியாபாரிகள் கடன் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் காணப்படுகிறது.

பெண்களின் கல்வியானது பாரம்பரிய வரம்புக்களால் கட்டுண்டுள்ளமையினால் அதன் பிரதிபலனை அனுபவிக்க முடியாதுள்ளதென அவர் கவனத்திற்கு கொண்டுவந்தார். இதன்போது பெண்களிற்கு சில தனியார் சட்டம் அதாவது காணி அபிவருத்தி கட்டளைச்சட்டம் போன்ற காணிச் சட்டம் பாரபட்சத்தினை செய்கின்றது.

இந்த மகளிர் தின நிகழ்விற்கு பிரதம அதிதியாக **முன்னால் ஜனாதிபதி கௌரவ சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரத்துங்க** அவர்கள் கலந்து கொண்டதுடன் அவர் தனது கருத்தில் இலங்கைக்கு அதிக வருவாயினை தருகின்ற துறையான ஆடைதொழில், தேயிலை துறை மற்றும் வெளிநாட்டு பணியாள் பெண்கள் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பு செய்கின்றனர். இருப்பினும் அவர்களது சமூகத்தில் இருக்கும் வரவேற்பு தொடர்பாக பிரச்சினைகள் காணப்படுகின்றன.

மேலும் அவர் தெரிவித்ததாவது பெண்கள் அரசியலில் பங்களிப்பு செய்வதை அதிகரிக்க செய்ய தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுடன் அது தொடர்பாக சமூகத்தின் பொறுப்பும் உள்ளது.

மேலும் முன்னால் ஜனாதிபதி தெரிவித்ததானது உடல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஆளாகும் பெண்களை பாதுகாத்தல் மிகவும் முக்கியமானதாகும். இது சம்பந்தமாக அதிக கொள்கை மற்றும் சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

அவர் மேலும் தெரிவித்ததானது உல்லாச பிரயாணத்துறையில் உரிய பயிற்சி வழங்கப்படுமாயின் அவர்களிற்கு தொழில் வாய்ப்புக்கள் பல கிடைக்கும். பராமரிப்பில்லாத பிள்ளைகள், இயலாமையடைய ஆட்கள் மற்றும் முதியோரை பராமரிப்பதற்கு உரிய பயிற்சி வழங்கப்படுமாயின் நாளுக்கு சில மணித்தியாலங்கள் மட்டும் வேலை செய்யக்கூடிய பெண்களுக்கு வசதியான தொழில்வாய்ப்புக்கள் காணப்படும்.

மேலும் புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்பம் சீரழிவானது சமூக பிரச்சினையாகும். அதன் போது பெண்கள் கவனம் செலுத்த வேண்டும். அரசாங்கத்தில் 2016-2020 பால் மற்றும் பால்நிலை அடிப்படையிலான துஸ்பிரயோத்திற்கு எதிராக தேசிய கொள்கை மற்றும் செயற்பாட்டு திட்டம் தயாரிக்கபட்டுள்ளதுடன் அது நடைமுறைப்படுத்தும் நடவடிக்கை இடம்பெறுகின்றது. மேலும் 2016 ஆண்டில் பாராளுமன்றத்தினால் சகல உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கான பெண்கள் பிரதிநிதித்துவம் 25%மாக இருக்க சட்டமாக்கப்பட்டதுடன் அது உரிய முறையில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

நல்லிணக்கச் செயற்பாடானது பெண்களின் பங்களிப்பின் ஊடாக அதிக வெற்றியடைந்துள்ளதென அவா் தெரிவித்தார். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு அதேபோல தெற்கிலுள்ள பெண்கள் பொருளாதாரரீதியாக வலுவூட்டுதல் மிகவும் அவசியமாவதுடன் அது தொடா்பாக தேசிய நல்லிணக்க காரியாலத்தினூடாக பரந்த செயற்றிட்டம் தயாாிக்கப்பட்டுள்ளதாக முன்னால் ஜனாதிபதி தெரிவித்தாா்.

அதன்போது சுயதொழில் உருவாக்கம், கடன்வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற பல செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இருப்பினும் பெண்கள் அரசாங்க உத்தியோகத்தா்களிடம் சேவையை பெற்றுக்கொள்ளும்போது பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் பாரபட்சங்களிற்கு உட்படுவதாக அவா் மேலும் குறிப்பிட்டாா்.

மேலும் யுத்ததினால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் பிள்ளைகளுக்கு மனநில பாதிப்புக்கள் காணப்படுகின்றது. அது தொடா்பான செயற்பாடுகளை தேசிய நல்லிணக்க காரியாலயத்தினூடாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்தாா்.

**வட்டமேசை கலந்துரையாடல்**

2017 ஆம் ஆண்டின் சர்வதேச மகளிர் தின வட்டமேசை கலந்துரையாடலை **கலாநிதி ஹரிணி அமரசூரிய** வழிப்படுத்தினார். கீழே குறிப்பிடப்பட்ட பெண்கள் அவர்களின் துறைகளில் எதிர்நோக்கும் சாவால்கள் வெற்றிகள் மற்றும் பிரச்சனைகள் சம்பந்தமாக கலந்துரையாடினர்.

1. **திருமதி. ரொசாணி வீரசிங்க** - ஆடைத்துறை (சுதந்திர வர்த்தக வலயம் - கட்டுநாயக்கா)
2. **திருமதி.கே.டி.சோமலதா** – ஊவாவெல்லச மகளிர் சங்கம் - விவசாயத்துறை (மொனறாகலை)
3. **திருமதி.மரியதாஸ் லக்ஸ்ம**ி - பனை உற்பத்தி மற்றும் தென்னை உற்பத்திதுறை (மட்டக்களப்பு)
4. **திருமதி.எம்.பி.சந்திராணி**- ஹம்பாந்தோட்டை ''காந்த மஹா சங்கமயா''- நுண்நிதி திட்டம் பாவிக்கப்படும் முறை (ஹம்பாந்தோட்டை)
5. **செல்வி.ஆனந்தி தேவேந்திர குமாரி** - தோட்ட தொழிலாளர் மற்றும் உள்நாட்டு வேலையாளர்(நுவரேலியா)

**1. திருமதி கே.டி.சோமலதா – (விவசாயத்துறை)**

வட்டமேசை மாநாட்டின் ஆரம்பத்தில் முதலாவதாக கே.டி.சோமலதாவுக்கு வாய்ப்பு கிடைத்தது. வெல்லஸ்ஸ கரும்பு விவசாயிகளின் பிரச்சனைகள் அப்பிரதேசத்தின் பெண்களின் சட்டம், பொருளாதாரம் மற்றும் அரசியல் சம்பந்தமாக அறிவூட்ட ''வெல்லஸ்ஸ காந்தா சன்விதானய''(பெண்கள் சங்கம்) உருவாக்கப்பட்டது. அதன் உறுப்பினராக செயற்படுவதாகவும் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது தற்போதைய சமூக முறைக்குள் விவசாயம் செய்யும் பிரிவினரை குறைவாக கணிக்கின்றனர். உதாரணமாக அரசாங்க காரியாலயங்கள், பொலிஸ் நிலையங்கள் விசேடமாக பிள்ளைகளை பாடசாலையில் அனுமதிப்பதற்கு விவசாயம் செய்யும் நபர்கள் ஒதுக்கப்படுகின்றனர்.

இருப்பினும் முறைசாரா சிற்றூண்டி உற்பத்தியில் விவசாயத்துறையினுள் 75% இற்கு மேலாக பங்களிப்பு செய்வது இந்த பிரிவினர் ஆவார். விவசாயத்தொழிலில் விருந்து வழங்கும்போது பெண்கள் புறக்கணிக்கப்படுவதுடன் பெண்களின் உழைப்பின் பங்களிப்பை கவனத்திற்கொள்ளவில்லையென அவர் தெரிவித்தார்.

விவசாயத்துறை பெண்கள் ஒரு நாளினுள் செய்யும் வேலையின் அளவு மிக அதிகமானது இருப்பினும் பெண்களின் பொருளாதார பங்களிப்பானது பெரும்பாலான புள்ளிவிபரங்களில் சுட்டிக்காட்டப்படவில்லை எனத் தெரிவித்தார்.

அவரின் மேலும் தெரிவித்ததாவது விவசயத்துறையில் சந்தைக்கான இடத்தை பெற்றுக்கொள்வதில் பெண்கள் ஆண்களுடன் போட்டி காணப்படுவதுடன் அப்போட்டியில் ஆண்களிற்கு அவ்விடம் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றது. அதேபோல விலைசம்பந்தமாக பேரம்பேசும்போது ஆண்கள் மேலும் பெண்களுக்கு சந்தா்ப்பம் வழங்குவதில்லையை காணக்கூடியதாகவுள்ளது. அவா் மேலும் தெரிவிக்கையில் நிறுவனமயப்படுத்தும்போது ஓரளவு வரவேற்பு மற்றும் பேரம்பேசும் சக்தியும் கிடைக்கின்றது.

அவா் மேலும் கவனத்திற்கு கொண்டுவந்தது 18 வயதிற்கு குறைந்த சிறுவா்களில் பெரும்பாலானோா் சட்டரீதியான திருமணத்திற்குள் இல்லாது வாழ்ந்து வருகின்றனா். இந்த பிரச்சனையால் பெண்பிள்ளைகள் அசௌகரியங்களுக்காளாகின்றனா். மேலும் விவசாய பிரதேசங்களில் வேளைக்கு திருமணம் செய்துகொள்வதுடன் அவா்கள் வேளைக்கே விவாகரத்துக்கும் ஆளாகின்றனா். இதன்போது அதிகளவு விவாகரத்து வழக்குகளும் பராமரிப்பு வழக்குகளின் விவசாய பிரதேசங்களில் காணக்கூடியதாகவுள்ளது.

அவா் குறிப்பிட்டதற்கமைய விவசாய பிரதேசமான மொனராகலை உட்பட ஊவா மாகாணத்தில் பெரும்பாலான காணிகளின் உரித்து பெண்களிற்கில்லையெனவும் காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டத்திறகமைய ஆண்களிற்கு காணி உரித்தினால் காணியில் பயிா்செய்வது சம்பந்தமாக தீா்மானம் எடுக்கும் உரிமை பெண்களிற்கு இல்லை. சரியானதோ அல்லது பிழையான சம்பிரதாயத்தினால் பயிரிடும் தீா்மானம் எடுக்கும் பெரும்பாலானோா் பயிா்செய்ய வேண்டும்.

அவா் தெரிவித்ததாவது ஆண்கள் மற்றும் பெண்கள் சமமான உரிமையை எப்போதும் கொண்டிருக்க வேண்டும்.

அதேபோல உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கான பெண்கள் பிரதிநிதித்துவதிற்கு 25% இடஒதுக்கீடு வழங்கப்பட்டாலும் பிரதேசசபைகள், மாகாணசபைகள் அல்லது பாரளுமன்றத்திலுள்ள குறைந்தளவில் காணப்படும் பெண் பிரதிநிதிகள் விவசாய பெண்களின் பிரச்சனை சம்பந்தமாக கவனம் செலுத்துவதில்லை.

அத்துடன் விவசாய பெண்களின் அரசியலுக்குள் வருவதற்கான வாய்புக்கள் குறைவென அவா் மேலும் தெரிவித்தாா். பெண்களின் சிறு பிரிவினரின் உழைப்பினால் மாற்றத்தை கொண்டவரமுடியாதுடன் பாரிய சங்கங்களாக நிறுவனமயப்படுத்தப்பட்டால் மாற்றத்தை ஏற்படுத்தலாம். அதற்காக தற்போதுள்ள நிதியுதவிகள் மிக்ககுறைவாகவுள்ளதால் பல செய்றிட்டங்கள் செயலிழந்துள்ளதாக அவா் தெரிவித்தாா். மேலும் கிராமிய பிரதேசங்களில் வளங்களை பகிா்ந்தளிப்பதில் மோசடி இடம்பெறுவதுடன் அது சம்பந்தமாக கொள்கை வகுக்கப்படல் வேண்டும். இதன்போது விவசாயத்துறை கீழ்மட்டத்திலுள்ளதென தரநிலை

படுத்தப்படுவதால் தேவையான வளங்கள் கிடைக்கப்படுவதில்லை அது சம்பந்தமாக கொள்கை வகுப்பாளர்களை அறிவுறுத்த வேண்டுமென கவனத்திற்கு கொண்டு வந்தார்.

அவர் மேலும் தெரிவித்தது அதிக பல்தேசிய கம்பனிகள் மொனராகலை பிரதேசத்தில் பாரியளவில் விவசாயச நடவடிக்கையில் ஈடுபடுவதுடன் போசணை பொருட்களுக்காக மிகத்தரம் குறைந்த இரசாய பசளைகளை பாவிப்பதுடன் அவை மனித உடலிற்கு தீங்கிழைக்ககூடியது. உணவு பாதுகாப்பு தொடர்பாக கொள்கை வகுப்பாளர்கள் அவதானம் செலுத்தவேண்டும் அதேபோல சாதாரண மக்களின் விவசாய இடங்கள் பல்தேசிய கம்பனிகளுக்கு வழங்கும்போது மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அவர் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

மேலும் தெரிவித்ததாவது கடன் வழங்கும் நிறுவனங்கள் அதிகளவில் விவசாய பிரதேசங்களிற்கு வந்து பலவந்தமாக கடனை வழங்கி அதனால் இப்போது அதிக நெருக்கடிகளுக்குள்ளாகியுள்ளனர். அத்துடன் சில நிறுவனங்கள் திட்டங்களின்றி கடன வழங்கி அதனை செலுத்தம்போது பிரச்சனைகள் காணப்படுகின்றது. இதன்போது அவர் மத்திய வங்கியினால் வழங்கப்படும் நவதம கடன் முறையான ஜீவசக்தி தேசிய கடன் முறை விவசாய பிரதேசங்களுக்கு சென்றடையவில்லை. அதனை அனுகும்போது பிரச்சனைகள் காணப்படுகின்றது. மின்னஞ்சல் ஊடாக தொடர்புகொள்ளவது கிராமிய மக்களிற்கு சிரமமானதுடன் அதுதொடாபாக அறிவுமில்லை. அதக் காரணமாக சகல கிராமங்களுக்கும் செல்லக்கூடியவகையில் சரளமான முறை இதன்போது உருவாக்கப்படல் வேண்டும்.

கிராமிய பெண்கள் வங்கிகளில் கடன் பெறுகின்றபோது உறுதியின் உரித்து கணவரின் பெயரில் இருப்பதின் காரணமாக குறித்த கடனை பெறமுடியாதுள்ளது. பெரும்பாலான வங்கியினால் வழங்கப்படும் கடன் அரசியல் தலையீட்டுடன் வழங்கப்படுகின்றது. பெரும்பாலான வங்கிகளினால் வழங்கப்படும் ரூ.50,000/- கடன்திட்டமுறையினுள் குறித்த பெணிற்கு தெரியாது பெண்ணின் பெயரில் கணவன் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றது. அந்தப்பணம் பின்னர் எவ்வித முகாமைத்துவமுமின்றி கணவரினால் பாவிக்கப்படுகின்றது.

**02.செல்வி.ஆனந்தி தேய்வேந்திர குமாரி** (தோட்டத்துறை மற்றும் பணிப்பெண்ளின் பிரதிநிதி)

அடுத்ததாக வட்டமேசைக்கலந்துரையாடலில் கருத்துதெரிவிக்க கிடைத்தது செல்வி.ஆனந்தி தேய்வேந்திர குமாரி ஆகும். ஆவர் தோட்டப் பெண்ணாகவும் அதேபோல பணிப்பெண்கள் சார்பாக செயற்படுவதுடன் தொழிற்சங்க தலைவியாகவும் சேவையாற்றுகின்றார்.

அவர் தெரிவித்ததாவது நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் பங்களிப்பினை வழங்குகின்றனர் அவர்களுக்கு போதுமான வசதியின்மை மற்றும் குறைந்த சம்பளமே கிடைக்கப்பெறுகின்றது. இத்தகைய சம்பளத்திற்கு அமைய அவர்களின் குடும்பங்களினை அவர்களினால் முறையாக பாராமரிக்க முடிவதில்லையென குறிப்பிட்டார்.

அதேபோல அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரணம் மற்றும் நன்மைகளினை பெற்றுக்கொள்வதில் பிரச்சனைகளுக்கு முகங்கொடுகின்றனர். பெரும்பாலான தொழிலாளர்கள் விசேடமாக பெண்கள் தங்கள் வேலைசெய்கின்ற தோட்டப்பகுதியனை விட்டு வெளியில் ஒருபோதும் செல்வதில்லையுடன் அவர்களினால் கொழும்பில் தாபிக்கப்பட்டுள்ள அரசாங்க கரியாலயங்களிற்கு செல்வதில் சிரமங்கள் காணப்படுகின்றது. அவர்கள் அவர்களின் சம்பளத்தினை அதிகரிக்க வேண்டுமாக இருந்தால் அவர்கள் போராட்டம் மற்றும் வேலைநிறுத்தங்களில் ஈடுபட வேண்டும். அவர்கள் தங்களின் கருத்துக்கள் மற்றும் பிரச்சினைகளினை வெளிப்படுத்த அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படாததுடன் தோட்டதொழிலாளர்களின் வாழ்க்கை தராதரத்தினை அதிகரிப்பதற்கான எந்த அரசுக் கொள்கைகளும் காணப்படவில்லை. குறிப்பாக தோட்டப்பெண்கள் உள்ளூர் பணிப்பெண்களாக தொழில்புரிவதுடன் அவர்களுக்கு பாதுகாப்புக்காக எந்தவிதமான முறையான சட்டங்களும் காணப்படவில்லையெனக் குறிப்பிட்டார்.

மேலும் தேயிலை பறிக்கும் நேரத்தினுள் வேறு வேலைகளையும் கொடுப்பதால் ஒரு நாளில் பறிக்க வேண்டிய இலக்கை அடையமுடியாது போவதால் நாளிற்கு நியமித்த சம்பளத்தை பெறமுடியாது போகின்றது.

**இதன்போது கீழ்காட்டப்பட்ட மதியுரைகள் கலந்துரையாடலில் கவனத்திற்கொள்ளப்படல் வேண்டும்**

- பெருந்தோட்தொழில்துறையில் அடிப்படை சம்பளம் சம்பந்தமாக முறைமை அவசியம்
- தோட்டதொழிலாளர்களுக்கு பொருத்தமான சகல சட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.
- தொழிலாளர் திணைக்களத்தின் செயற்பாடுகளில் மாற்றம் வேண்டும்.
- தோட்ட அதிகாரிகள் தொழிலாளர்களின் சூழ்நிலைகளினை புரிந்து மற்றும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

- தொழிலாளர் சங்கங்கள் கட்சி அரசியலில் இருந்து அகற்றல்.
- மக்கள் ஆலோசனை குழுவிற்கு சமூகமளிக்க கெண்களிற்கு வாயபின்மை.
- சட்டவாக்கம் கொழும்பிலே மட்டுமல்லாது இது பிராந்திய அளவிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- தேயிலைதோட்டத்துறை தொடர்பிலான புதிய சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

இதன்போது பொருளாதாரதுறையில் பெண் தோட்டத்தொழிலாளர்கள் முகம் கொடுக்கின்ற பெரும்பான பிரச்சனைகள் எழுவதற்கு குறித்த தோட்டம் தனியார்மயப்படுத்தலே ஒரு காரணமாகுமெனக்குறிப்பிட்டார்.

அத்துடன் நுவரேலியா மாவட்டத்தினுள் மந்த போசணை நலைமை காணப்படுவதுடன் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகளவில் அறிக்கையிடப்படகின்றது.

மேலும் இந்த தொழிலாளர்களுக்கு மொழி பிரச்சனை இருப்பதுடன் சட்டம் மற்றும் நடபடிமுறைகளை செயற்படுத்துவதில் தனியாளின் வேறுபாட்டினை கவனியாது சமமான முறையில் செயற்படுவது அரசாங்க உத்தியோகத்தர்களின் பொறுப்பாகுமென வெர் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

**03. திருமதி.ரோசணி வீரசிங்க (ஆடை உற்பத்தி துறை)**

ஆடை உற்பத்தித்துறையில் ஈடுபடுகின்ற பெண்களை பிரதிநிதித்துவம் செய்து வட்டமேசை கலந்துரையாடலுக்காக திருமதி.ரோசணி வீரசிங்க சமூகமளித்திருந்தார். அவர் ஆடைஉற்பத்தி தொழிற்சாலையில் தொழில்புரிவதுடன் அரசசார்பற்ற நிறுவனத்துடன் இணைந்து ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரியும் பெண்களின் சமூகநலனிற்காக செயற்படுகின்றார். அவர் கருத்து தெரிவிக்கையில் சுதந்திர வர்த்தக வலையங்களில் பணிபரியும் பெண்களை பெரும்பாலும் மிக்கீழ்நிலையிலேயே கவனிப்பதுடன் அவர்கள் பாதைகளில், விடுதிகளில் அதேபோல தொழில் செய்யும் இடங்களில் பல்வேறு துஷ்பிரயோகங்களிற்கு ஆளாகின்றனர்.

மேலும் பெண்கள் அதிக காலம் இரசாயன பதார்த்தம் கொண்ட தொழிற்சாலைகளில் வேலை செய்யும் போது பெண்களுக்கு குழந்தை இன்மை போன்ற பிரச்சனைகளும் ஏற்படுகிறது. அதேபோல சுதந்திர வர்த்தக வலய 62% பெண்களுக்கு போசனைக்குறைபாடு மற்றும் பிரச்சனையும் காணப்படுகிறது. சுதந்திர வர்த்தக வலய பெண்கள் தங்கும் இடத்தில் ஏற்படும் இயற்கை அனர்த்தத்தின் போது அரசினால் வழங்கப்படும் அனர்த்த நிவாரண சலுகைகள் கிடைக்கப்பெறுவதில்லையென அவர் மேலும் தெரிவித்தார். பிள்ளைகளுக்கு பால்

கொடுப்பதற்கான ஒரு மணி நேரத்தினை வழங்குகின்றபோது ஏற்படும் பிரச்சனைகளையும் அவா் அவையோரின் கவனத்திற்கு கொண்டுவந்ததாா்.

அவரது கருத்தை முடிவுறுத்த முன்னா் அவா் குறிப்பிட்டதாவது மனிதவலு சேவையாளா்கள் தொழில்பாதுகாப்பு சம்பந்தமாக காணப்படும் பிரச்சனைகளை கவனத்திற்கு கொள்ள வேண்டும் இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு அதிகபங்களிப்பு செய்யும் சுதந்திர வா்த்தக வலய பெண்தொழிலாளா்களிற்கு …….. மேலும் திருமதி.ரோசணி வீரசிங்க தெரிவித்ததாவது சுதந்திர வா்த்தக வலய பெண்களின் வாக்களிக்கும் விடுமுறையை பெற்றுக்கொள்வதில் பிரச்சனையினால் சகல பிரதேசங்களிற்கு போகமுடியாதுள்ளதனால் சுதந்திர வா்த்தக வலயத்தில் சேவை செய்கின்ற பெண்களிற்கு வாக்கினை உபயோகிக்கும் உரிமை இல்லாது போகின்றது. தாங்கள் தொழில் செய்யும் சுதந்திர வா்த்தக வலயத்தினுள் வாக்களிப்பு நிலையத்ததை நிறுவமுடியாதா என அவா் கேள்வி எழுப்பினாா்.

**04. திருமதி.லக்ஸ்மி மரியதாஸ்( பனை மற்றும் தென்னை ஓலை உற்பத்திபொருட்கள்)**

மட்டக்களப்பு பிரதேசத்தில் பனை மற்றும் தென்னை ஓலை உற்பத்தி பொருட்களைச் செய்கின்ற திருமதி.லக்ஸ்மி மரியதாஸ் அடுத்ததாக வட்டமேசை கலந்துரையாடலில் கருத்துகக்களை தெரிவித்தாா்.

அவா் இதன்போது யுத்தத்தினால் பாதிப்புற்ற பெண்கள் தொடா்பாக கவனம் செலுத்தினாா். அவர் சுயதொழில் முயற்சியினை சேர்ந்த பெண்களினை ஊக்கப்படுத்த வேண்டும் என குறிப்பிட்டார். அவர் வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கு செல்லும் பெண்கள் பல பிரச்சினைகளிற்கு முகம் கொடுப்பதாகவும் பெரும்பாலான பெண்கள் சம்பளம் இல்லாமல் வீடு திரும்புவதாகவும் அவர்கள் மனரீதியாக பாதிக்கப்பட்டவர்களாக காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

கொள்கைகள் மற்றும் சட்டங்களினை நடைமுறைப்படுத்தும்போது பல்வேறு தொழிலிலுள்ள பெண்கள் இருப்பதாகவும் அவா்கள் தொடா்பில் அவதானம் செலுத்தப்படல் வேண்டுமென அவா் குறிப்பிட்டிருந்தார்.

**05. திருமதி. எம்.பி.சந்திராணி (**ஹம்பாந்தோட்டையின் ஹாந்தா மஹா சங்ஹமயவின் பிரதிநிதி நுண் நிதி முறை பாவிக்கப்படும் முறைமை)

ஹம்பாந்தோட்டை ஹாந்தா மஹாசங்ஹமயவின் பயிற்சி மற்றும் வலுவூட்டல் பிரிவின் உதவியாளர் திருமதி. எம்.பி.சந்திராணி இதன்போது தொரிவித்ததாவது கமி சக்தி வங்கி செயற்றிட்டத்தின் கீழாக கிராமிய பெண்களினை சமூக வலுவூட்டல் செயற்றிட்டம் மற்றும் நிதிஉதவி வழங்கும் திட்டம் செயற்படுத்தப்படுவதுடன் சமூக வலுவூட்டல் ஊடாக பெண்கள் மற்றும் குடும்பங்களின் மனநிலையில் மாற்றமடையச்செய்வதற்கு தங்களது சங்கம் முயற்சிற்பதாக தெரிவித்தார். மனநிலை மாற்றத்திற்கு சமமாக பொருளாதாரரீதியாக பலபடுத்தும் ஆற்றலினையும் அபிவிருத்தி செய்தல் வேண்டும். பெரும்பாலான பெண்களிற்கு வங்கிகளில் கடன் பெறும்போது பிரச்சனைகள் ஏற்படுவதுடன் பிணை வைத்தலும் அவசியமாகும்.

சிறு குழுக்கள் ஊடாக நுண்கடன் வசதிகள் தமது அமைப்பினூடாக வழங்கப்படுவதுடன் அந்த வசதிகளை பாவித்து பொருளாதார மற்றும் சமூகரீதியாக வலுவூட்டப்படுவதாகவும் தெரிவித்தார்.

இந்த முறையினூடாக பெண்களிற்கு சமூகத்தில் மற்றும் குடும்பத்தில் வரவேற்பு இருப்பதற்குரிய அவசியமான சூழல் ஏற்படுத்திகொடுக்கப்படுகின்றது.

**பங்குபற்றுனர்களின் கருத்துக்கள்**

**செல்வி.பூமி ஹரிந்திரன்** இதன்போது பிரதான மூன்று பிரச்சனைகளை முன்வைத்தார்.

1. பெண்களுக்கான சிறப்பான நாள் தேவையா?
2. எங்கள் சார்பாக வேவை செய்கின்ற அரசாங்க ஊழியர்களிடம் அவசிய வேலையினை நாம் பெறுகின்றோமா?
3. பெண் சம்பந்தமாக வகைப்படுத்தல் காணப்படுகின்றதா?

பெண்கள் தினத்தில் இடம்பெறுகின்ற கலந்துரையாடலின் பின்னர் எல்லாம் மறந்து சகல நடவடிக்கைகளும் இடம்பெறவதை காணக்கூடியதாகவுள்ளது எனத்தெரிவித்தார்.

**செல்வி.விஜித்தா அலஸ்**- வெளிவாரி வளங்கள் திணைக்களத்தின் மேலதீக பணிப்பாளர் நாயகம்,

தன் நோக்கினை பின்வருமாறு வெளிப்படுத்தியிருந்தார். அவர் போசணை அளவானது தோட்டத்துறைகளின் கீழ் தொழிற்படும் பெண்களிற்கு மிக குறைவு என்பதாக குறிப்பிட்டதுடன் அவர்களில் பெரும்பாலானோரிற்கு மந்த போசணை நிலை காணப்படுகின்றது. இந்த நிலைமை பெரும்பாலான கிராமிய பிரதேசங்களிலும் காணப்படுகின்றது.

சுகாதார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஊடாக பெண்கள் மற்றும் சிறுவர்களிற்கு போசணை அளவினை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேவேளை நுண் கடன் வசதிகள் வழங்குவதற்குரிய வேலைத்திட்டம் மத்திய வங்கியினால் அரசாங்க மற்றும் வெளிநாட்டு உதவியின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது. கிராமிய பெண்கள் அது தொடர்பாக அறிவூட்டப்பட வேண்டுமென்பதுடன் சந்தைவாய்புக்கான உதவி மற்றும் தொழில்நுட்ப உதவி அதன்போது பெறக்கூடியதாகவிருக்கும்

**செல்வி. சந்திர பத்மினி**- இலங்கை தொழில்நுட்ப ஆய்வு மற்றும் கொள்கைக்கான நிறுவனம் அவர் இலங்கையில் பெரும்பாலான பெண்கள் திருமணத்தின் பின்னர் தங்களின் வேலையினை கைவிடுவதுடன் அவர்களில் சிலா் சுயதொழில் முயற்சியினை செய்கின்றனர். பலா் வேலையில் இருந்து விலகுவது பிள்ளைகளை பராமரிப்பதற்காகவாகும். அத்துடன் முன்பருவ குழந்தைகளின் அபிவிருத்தி தொடர்பாக நாட்டினுள் கொள்கை உருவாக்கப்படவில்லையெனவும் அது தொடர்பாக கொள்கை தயாரிக்கப்படல் வேண்டுமெனவும் குறிப்பிட்டாா்.

**திரு.தேனு ரங்கித்** கல்வி பெற்றுக்கொண்ட பெண்களில் 70%ஆனோா் வேலையில்லாமல் இருப்பதுடன் கலாச்சாரத்தினாலும் பாரம்பரியத்தினாலும் ஒழுக்கத்தினாலும் கட்டப்பட்டிருக்கின்றனா் எனக் குறிப்பிட்டிருந்தார். நாங்கள் சந்ததியிற்கு சந்ததி விலங்கிடப்படுகின்றோம்.

**திருமதி. ஷிரியா தயாவன்ஸ** இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர்

வறுமையை ஒழிப்பதற்காக கடன் முன்மொழிவு திட்டமான PAMP ஊடாக 85% அளவான பெண்களிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் விசேட நிறுவனங்களுடன் சேர்ந்து மத்திய வங்கி பயிற்சி நிகழ்ச்சிகள், நிதி கொடுக்கல் வாங்கல்களை செய்யும் முறை அதேபோல திறன் விருத்தி நிகழ்ச்சி திட்டங்கள் நாடு பூராகவும் நிகழ்த்தப்படுகின்றது. அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட நவதம கடன் திட்டமுறை சுவசக்தி தேசிய கடன் திட்டம் முறையாவதுடன் தற்போதுவரை பாரிய நிகழ்ச்சி திட்டமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அத்திட்டத்தின் கீழ் சுயதொழிலிற்கு ரூ. 250,000/- வரை அதிகபட்சமாக கடன் பெறக்கூடியதாகவிருப்பதுடன் வருடாந்த வட்டி வீதம் 5.5% ஆகும். இதன்போது அதிகளவாக ரூ. 50,000/- கடன் மீள்செலுத்ததேவையில்லை என்ற அடிப்படையில் வழங்கப்படும். இந்த கடன் முறையில் பெண்கள் தொடர்பாக விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. ஊடகங்கள் ஊடாக இது சம்பந்தமாக பரந்த பிராச்சாரம் செய்யப்படுவதுடன் அதற்காக அரசாங்கம் 1000 மில்லியனை ஒதுக்கியுள்ளது. அதனை 4000 மில்லியன் வரை அதிகரிக்க எதிர்பார்க்கின்றோம். 17 இலங்கை வங்கி ஊடாக

இந்த நிதியைப் பெற முடியும். இந்த கடன் திட்டம் பற்றி பிரச்சாரம் செய்யப்படுவதுடன் தொலைபேசியினுடாக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் மின்னஞ்சல் ஊடாகவும் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். மேலதிக விபரங்களை இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களம் அதேபோல தேசிய கொள்கை மற்றும் பொருதார நடவடிக்கை அமைச்சிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த சுவசக்தி கடன் திட்ட முறை தொடர்பாக கருத்து தெரிவித்த திருமதி **கே. டீ. சோமலதா** இந்த கடன் திட்டம் விவசாய பிரதேசங்களில் பெற்றுக்ககொள்ள முடியாது அந்த வசதிகளை அனுகுவதில் பிரச்சனைகள் காணபடுகின்றது. அறிவிப்பதற்காக துரித அழைப்பு தொலைபேசி எண்ணை தொடர்புகொள்ள பிரச்சனைகள் உள்ளது. பெரும்பாலான நேரங்களில் தொலைபேசியில் காத்திருக்க வேண்டியுள்ளது. அதேபோல மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளல் மக்களுக்கு சிரமமானதுடன் அது சம்பந்தமாக அறிவும் இல்லை. அதன் காரணமாக சகல கிராமங்களிற்கும் செல்லக்கூடிய சரளமான முறையை தயாரிக்க வேண்டுமென அவர் தெரிவித்தார்.

**திருமதி. ஷமிளா துஷாரி - தா பிந்து எக்கத்துவ, சுதந்திர வர்த்தக வலயம்**

அவர் குறிப்பிட்டதாவது ஆடை தொழில்துறைக்கு கடந்த காலங்களில் GSP+ வரிச்சலுகை வழங்கப்பட்டது அதன் பிரதிபலன் தொழிலாளர்களுக்கு கிட்டவில்லை.

மேலும் வட கிழக்கில் தாபிக்கப்பட்டுள்ள தொழிற்சாலைகளில் பெண் தொழிலாளர்கள் பல்வேறுவிதமான துஷ்பிரயோகங்களிற்கும் தொழில்சட்டங்கள் அதிகளவில் மீறப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்

அதேபோல கட்டுநாயக்கா, பியகம சுதந்திர வர்த்தக வலயத்திற்கு புலம்பெயர்ந்துள்ள தமிழ் பெண் தொழிலாளர்கள் பேரூந்து பெயர்பலகை தமிழ் மொழியில் குறிப்பிடப்படாததால் அசௌகரியங்களுக்குட்படுவதாக தெரிவித்தார். மேலும் சம்பளச்சிட்டை தமிழில் இல்லாததுடன் வங்கி கொடுக்கல் வாங்கல்கள் மொழியினால் பிரச்சனையாக உள்ளதெனத் தெரிவித்ததுடன் சுதந்திர வர்த்தக வலயத்தினுள் வணக்க தலங்கள் இன்மையால் தமிழ் பெண் தொழிலாளர்களுக்கு மத அனுஷ்டானங்களை மேற்கொள்ள முடியாதுள்ளது.

**திரு.சமிந்த - இலங்கை கெல்ப்பேஜ் நிறுவனம்**

வயது முதிர்ந்த பெண்களின் சனத்தொகையானது இலங்கையில் அதிகரித்துவருவதுடன் அதிகமான பெண்கள் குடும்பத்திலிருந்து வெளியேற்றபடுகின்றனர். பெண்கள் தொடர்பாக கொள்கைகள் வகுக்கப்படும்போது வயதுமுதிர்ந்த பெண்கள் தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்பட வேண்டுமென அவர் கருத்து தெரிவித்தார். மேலும் அவதானத்திற்கு கொண்டு வந்தது வயதுமுதிர்ந்த பெண்களின் சுயதொழிலில் ஈடுபடும் ஆற்றல் விருப்பம் இருந்தும் கொடுப்பனவுகள்

வழங்கும்போது அவர்கள் கடும் சிரமங்களுக்குள்ளாகின்றனர். அத்துடன் எந்தவொரு நிறவனமும் 60 வயதிற்கு மேற்பட்டோரிற்கு கடன் வழங்க விரும்புவதில்லையுடன் அது தொடர்பாக கொள்கை ஆக்குனர்கள் அவதானத்தை செலுத்த வேண்டும்.

**திருமதி.அப்சரா வீரசேகர** - வீடு மற்றும் கட்டுமான அமைச்சு
அதிகதான பெண்கள் பிள்ளைகளை பராமரிப்பதற்காக தொழில்களில் இருந்து விலகுகின்றனர். இலங்கையினுள் பாடசாலை முடிந்த பின்னர் பிள்ளைகளை பாராமரிக்க முறைகளேதுமில்லை. ஆகையால் பாடசாலை முடிந்த பின்னர் பாதுகாப்பாக வைப்பதற்கு முறை மற்றும் அது தொடர்பாக கொள்கை மற்றும் சட்டம் உருவாக்கப்படுமானால் தொழில் செய்யும் பெண்களுக்க அவ்வசதிகள் கிடைக்கும். மேலும் இதுதான் குடும்பக்கட்டுப்பாட்டுக்கும் காரணமாக அமைகின்றது.

வட்டமேசை கலந்துரையாடலின் இறுதியில் **கலாநிதி அமரசூரிய** தெரிவிக்கையில் பெண்களிற்கு உபாயத்திட்ட அவசியம் மற்றும் கலாச்சார வேறுபாடுகள் சம்பந்தமாகவும் இலங்கை பின்னடைவுநிலையிலுள்ளமையினால் அது சம்பந்தமாக எங்களுடைய அவதானத்தை கட்டாயமாகச் செலுத்த வேண்டுமெனக்குறிப்பிட்டார்.

இதன்போது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் **கலாநிதி தீபிகா உடகம** அவர்கள் கருத்து தெரிவிக்கையில் முன்வைக்கப்பட்ட சகல கருத்துக்கள் நடைமுறையில் செயற்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல கொள்கை வகுப்பாளர்கள் கொள்கைகளை தயாரிக்கும்போது பல்வகைமை சம்பந்தமாக அவதானம் செலுத்த வேண்டுமென மேலும் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில் எங்களுக்கு கிடைக்கும் சம்பிரதாய கல்வி முறையில் பல்வேறு பிரச்சனைகள் உள்ளன. தொழிலாளர் என்றவகையில் புதிய உலகை நோக்கிய பயணத்தில் சம்பிரதாய வரம்புக்குள் வேலை செய்ய வேண்டுமென சமூகத்தினால் பெண்களிற்கு அறிவுரை வழங்கப்படுகின்றது.

கல்வி முறையில் காணப்படுகின்ற பிரச்சனைக்கான தீர்வு அதேபோல நன்நடத்தையில் ஏற்படவேண்டிய விருத்தி சம்பந்தமாக அவதானம் செலுத்த வேண்டுமென தவிசாளர் தெரிவித்தார். அத்துடன் கொள்கை வகுப்பாளர்களினால் சம்பந்தமான கொள்கைகளை உருவாக்கும்போது மக்களின் வாழ்க்கைக்கு பொருத்தமானதாக உருவாக்கப்படுவதில் கவனம் செலுத்த வேண்டுமெனத் தெரிவித்தார்.

அதேபோல அவர் கவனத்திற்கு கொண்டுவந்தது காணி உரிமை மற்றும் கடன் பெற்றுக்கொள்ளும் சம்பந்தமான பிரச்சனை, கொள்கைரீதியான பிரச்சனை சம்பந்தமாக ஆணைக்குழுவிற்கு செய்யும் முறைப்பாடு குறைந்து செல்கின்றது. அதேபோல மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட கடன் வழங்கும் முறை மக்களிற்கு சிரமமானது கிராம சேவையாளரூடாக மக்களுக்கு வழங்க முடியாதா

சம்பந்தமாக தவிசாளர் கருத்து தெரிவித்தார். மேலும் பிள்ளைகளை பராமரிக்கும் முறை சம்பந்தமாக தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் கலந்துரையாடப்பட வேண்டியதுடன் படித்த பெண்கள் தொழிலிற்கு செல்லாமலிருப்பது இக்காரணத்தினாலாகும். அதேபோல நெகிழ்வான கடமை நேரம் நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக கவனம் செலுத்துவது பொருத்தமாக இருக்குமென தெரிவித்த தவிசாளர் ஆனால் இலங்கையின் வினைத்திறன் சம்பந்தமான பிரச்சனை காணப்படும் அது சம்பந்தமாகவும் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

சர்வதேச மகளிர் தினத்தை தழுவி இடம்பெற்ற வட்டமேசை கலந்துரையாடலில் எழுந்த கருத்துக்கள் மற்றும் மதியுரைகளை உள்ளடக்கிய அறிக்கையை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து அவ் அறிக்கையை அதிகாரவமைப்புக்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தவிசாளர் தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள பிரபல பெண் தொழில் முயற்சியாளர்களை இறுதியில் ஞாபகப்படுத்தி சகல பங்குபற்றுனர்ளிற்கும் நன்றியை தெரிவித்தார்.

## 2.2 பிரதேச காரியலயத்தின் நிகழ்வுகள்

### 2.1.1 அநுராதபுரம் பிராந்திய காரியாலயம்

**அறிமுகம்**

முறைசாரா பொருளாதாரதுறையைச் சேர்ந்த பெண்களினை மரியாதைப்படுத்துவதும் ஊாக்கப்படுத்துவதும் மற்றும் அவர்களின் அனுபவம், சவால்கள் மற்றும் அடைவுகள் என்பவற்றினை பகிர்ந்து கொள்வதற்காகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனுராதபுர பிராந்திய காரியாலயமானது சர்வதேச பெண்கள் தினத்தினை 08.03.2017 அன்று கிரஸ்டன் பார்க் மண்டபத்தில் ஏற்பாடுசெய்திருந்தது.

**பங்குபற்றுனர்கள்**

திருமதி. லீலாவதி குணவர்த்தன- வீட்டுக் கைத்தொழில், ஏ.குசுமாவதி- வியாபார பிரிவு, என்.ஜீ.கமலாவதி- மாற்றுத்திறனாளி வேலையாட்களின் பிரதிநிதி மற்றும் ஜீவந்தி லீயனகே- ஹரிதா சங்கத்தின் பிரதிநிதி - விவசாய உற்பத்தி ஆகியோர் வட்டமேசை கலந்தரையாடலில் கருத்துக்களை பகிர்ந்துகொண்டனர். கொள்கை வகுப்பாளர்துறையை பிரதிநிதித்துவம் செய்கின்ற மதிப்பிற்குரிய எச்.பி.சேமசிங்க - காணி, பிரதேச அபிவிருத்தி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர், பி.வி. தயாரத்ன - மாகாணத்திணைக்களத்தின் திட்டமிடல் மற்றும் மேற்பார்வை பிரதி தலைமை செயலாளர்,ஆர்.எஸ்.பி.குணவர்த்தன - கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் பிரதி பணிப்பாளர், பி.பி.டி. குணவர்த்தன - மாவட்ட வர்த்தக சபையின் நிறைவேற்று அதிகாரி உட்படஅரசாங்க மற்றும் அரசசாரா அமைப்புக்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பெண் அமைப்புக்களின் பிரதிநிதிகள் இந்நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர்.

**சவால்கள் மற்றும் பிரச்சனைகள்**

- **திருமதி.என்.ஜீ.கமலாவதி**

  அவர் மாற்றுத்திறனாளி வேலையாளர்களினை பிரதிநிதித்துவம் செய்து இருந்தார். அவருடன் 200 மாற்றுத்திறனாளிகள் வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சைகை மொழிபெயர்பாளர்களினை அவர்களின் பயிற்சி நிகழ்சியில் கொண்டிருப்பதில்லை அதனால் அவர்களினால் பயிற்சி நிகழ்சியுடன் தொடர்பான சரியான தகவல்களினை தொடர்பு கொள்ள முடியாமல் காணப்படுகின்றது. பெரும்பாலான பயிற்சி நிகழ்ச்சிகள் மாவட்ட செயலாளர் காரியாலயத்தின் மேல்தளத்திலுள்ள மண்டபத்திலே இடம்பெறுவதனால் மாற்றுத்திறனாளிகள் படிக்கட்டுகளில் ஏறி அவ்விடத்தினை அடைய முடியாதநிலை காணப்படுகின்றது. மேலும் சமூகசேவை திணைக்களம் மட்டுமல்லாது சகல நிறுவனங்கள், அமைச்சுக்கள்

மற்றும் திணைக்களங்கள் மாற்றுத்திறனாளி பெண்களின் பிரச்சனைகளை கருத்திற்கொள்ளவேண்டுமென தெரிவித்ததுடன் அவர்களின் உற்பத்திகளினை போக்குவரத்து செய்யும் போது பல கடின தன்மைகள் காணப்படுகின்றது. சந்தை நிலையம் அல்லது ஏதேனும் ஒரு பொறிமுறை அவர்களின் பொருட்களினை வாங்குவதற்காக அவர்களின் கிராமங்களில் ஏற்படுத்த வேண்டும். இன்னும் அத்தகைய எந்த பொறிமுறையும் காணப்படவில்லை. தங்களின் பிரச்சினையில் கவனம் செலுத்த வேண்டும் என குறிப்பிட்டிருந்தார்.

- **செல்வி.ஹர்சணி தயானந்த**

  சில பெண்கள் தங்களுடைய மாற்றுத்திறனாளிகளாக காணப்படும் பிள்ளைகளினை பராமரிக்க வீட்டில் தங்க வேண்டியிருப்பதனால் அவர்களினால் வேலைக்கு செல்லமுடியாதுள்ளது. வீடுகளில் தங்கியிருந்து சுயதொழில் முயற்சியில் ஈடுபடவைத்தலே மிகச் சாதகமானதாக இருக்குமென தெரிவித்தார். குடும்ப உறுப்பினர்கள் அரசாங்க சேவையினை புரிபவரா அல்லது இல்லையா என்பதனை கருதாமல் ஒவ்வொரு குடும்பத்திலும் காணப்படும் மாற்றுத்திறளாளி பிள்ளைகளுக்கு நன்மைகளினை வழங்க வேண்டும் என சிபார்சினை முன்வைத்தார். இது சம்பந்தமான பெண்கள் சம்பந்தமாக எந்த கொள்கைகளும் வடமத்திய மாகாணத்தில் காணப்படவில்லை அத்துடன் மாற்றுத்திறனாளிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளினை நடத்துகின்ற போது அவர்களினை பராமரிப்பவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என சிபார்சினை மேற்கொண்டார்.

- **திருமதி.ஏ.குசுமாவதி**

  அவா் கருத்தில் வெளிப்படுத்துவதாவது அரசாங்க கடன் வழங்கும் நிறுவனங்களில் இருந்து கடனினை பெறுகின்ற போது பல கடினத்தன்மைகளிற்கு முகங்கொடுக்கவேண்டியுள்ளது. அவா்களின் சந்தையை நடத்திசெல்வது சம்பந்தமாக ஆலோசனை பெற்றுக்கொள்ள எந்தவொரு பொறிமுறையும் இல்லை. அரசாங்கத்தினூடாக இவ்வியாபாரிகளுக்கு ஆலோசனை வழங்குவதற்குரிய பொறிமுறையை உருவாக்கி கடனை இலகுவாக பெறக்கூடிய வகையில் வேலைத்திட்டங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- **திருமதி.லீலாவதி குணவர்த்தன**

  அவர்களின் உற்பத்திப்பொருட்களுக்கான சந்தை காணப்படாமையினை குறிப்பிட்டார். மக்கள் பெரும்பாலாக செல்லும் சில விஷேட பிரதேசங்களில் அவர்களின் பொருட்களினை விற்பதற்கான இடம் அவர்களுக்கு காணப்படாமை மூலப்பொருட்கள் பெரும் உற்பத்தி வியாபாரங்களிற்கே விநியோகிக்கப்படுவதுடன் சிறுகைத்தொழிலாளரிற்கு இதனை பெற்றுக்கொள்வதில் சிரமத்தினை ஏற்படுத்துகின்றது. சுய முயற்சியாளரின் தொடர்ச்சியாக செலுத்தப்படும் வரிப்பணத்தின் அளவு பெரும் பிரச்சினையாக காணப்படுகின்றதென அவா் மேலும் தெரிவித்தார். அரசசார்பற்ற பிரிவுகள் எப்போதும் தம்மை ஆதரவினையும் ஊக்கப்படுத்தலினையும் மேற்கொள்கின்றன எனத்தெரிவித்ததுடன் தங்களின் சுயதொழில் முயற்சிக்காக பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மிகவும் பெறுமதி கொண்டதாக காணப்படுவதுடன் அவர்கள் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்த மக்கள் போக்குவரத்தினை பயன்படுத்த வேண்டியிருப்பது போன்ற பல பிரச்சினைகளினை குறிப்பிட்டதுடன் அது தொடர்பாக அரசாங்க அமைப்புக்கள் தலையீடு செய்ய வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

- **ஜீவந்தி லீயனகே**

  அவர்களின் அலங்கார மலா் வளா்ப்பில் ஈடுபடும் பெண்களிற்கு அவா்களின் உற்பத்தியான மலா் தாவரங்களை விற்பனை செய்வதற்கான சந்தை மத்தியநிலையத்தை அனுராதபுர நகரத்தில் ஏற்பாடுசெய்யப்படுமாயின் சாதகமாக அமையும் எனக்குறிப்பிட்டாா். அலங்கார மலா்தாவரவளர்ப்புடன் தொடர்பான விற்பனையாளர்கள் தங்களின் மத்தியில் அனுபவங்களினை பகிர்ந்து கொள்வதற்கு தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் விழிப்புணர்வு நிகழ்சிகளினை மேற்கொள்ளல். தற்போதைய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினால் பயிர்கள் மற்றும் பூச்சாடிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றது. இருப்பினும் இவை எல்லா மலா் தாவரவளர்ப்பு விற்பனையாளர்களுக்கும் போதுமானதாக காணப்படவில்லை.

- வள பங்கீடு செய்யும்போது மற்றும் நிதி உதவி வழங்கல் நிகழ்ச்சிகளின்போது அரசியல் தலையீடு காணப்படுதல்

- கிராமிய பெண்களுடைய உற்பத்திகளை அறிமுகப்படுத்தும் நிகழ்வுகளை விருத்தி செய்தல்

- தற்போது நடைமுறையிலுள்ள சட்டம் மற்றும் கொள்கைகள் பெண்களிற்கு கிட்டவில்லை
- அரசாங்க நிறுவனங்கள் ஊடாக அரசியல் தலையீடு இல்லாமல் சரியான புள்ளிவிபரங்களின் அடிப்படையில் கிராமிய பிரதேசங்களில் இருக்கின்ற தேவைகளை முன்னேற்ற அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

**அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளின் கருதுக்கள் / பதில்கள்**

- **கௌரவ அமைச்சர் எச்.பி.சேமசிங்க அவர்கள்**
  சமூகசேவை திணைக்களத்தினூடாக சைகை மொழிபெயர்பாளர்களை பெற்றுத்தருவதாக அமைச்சா் வாக்குறுதியளித்ததுடன் அரசாங்க கட்டத்திற்குள் மாற்றுதிறனாளிகளுக்கான அனுகுவதற்கான வசதிகளினை வழங்குவதற்கு ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படடுள்ளதுடன் அதுதொடா்பாக அதிகாரிகளுக்கு பயிற்சி நிகழ்ச்சிகளினை மேற்கொள்வதற்கான நெறிவுறுத்தல்களினை வழங்கமுடியும் என குறிப்பிட்டார்.

- பி.பி.தயாரத்தன திட்டமிடல் மற்றும் மேற்பார்வையிடல் பிரிவு மாகாணத்திணைக்களத்தின் பிரதி தலைமை செயலாளரால் அவருடைய திணைக்களத்தினூடாக கல்வி மற்றும் சுகாதாரத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது இருப்பினும் முறைசாரா தொழில்துறையினா் கவனத்தில்கொள்ளப்படவில்லை எனக்குறிப்பிட்டாா்.

- மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தினுடைய பிரதிபணிப்பாளர் திருமதி.எஸ்.பி.என்.குணவர்த்தன அவர்கள் திணைக்களத்தில் பதிவு செய்த சகலரிற்கும் பயிற்சி அளிக்கப்படுவதாகவும் பற்றிக் கைத்தொழில் மற்றும் கைத்தறி அதனுள் அடங்கும் எனவும் பயிற்சியில் கலந்த கொள்பவா்களிற்கு அவர்களின் பொருட்களினை விற்பனை செய்வதற்கு பொருத்தமான வசதிவாய்புக்கள் பெற்றுத்தரப்படும் எனவும் தெரிவித்தார்.

- அனுராதபுர வர்த்தக சங்கம் தம்மால் இலவச பயிற்சி நிகழ்வுகள் ஊடாக வழிகாட்டல்கள் வியாபாரிகளிற்கு வழங்கப்படுவதாகவும் ஒரு குழுவில் 30 இற்கு குறைவான உறுப்பினர்களிற்கு நிகழ்ச்சிகளில் பங்குபற்ற வாய்ப்பு கொடுக்கப்பட முடியுமெனவும் தெரிவித்தனா்

### 2.1.2 பதுளை பிராந்திய காரியாலயம்

**அறிமுகம்**

பதுளை பிராந்திய காரியலயமானது சர்வதேச பெண்கள் தினத்தினை 08.03.2017 அன்று பிரதேச செயலாக அரங்கில் கொண்டாடியது.

இந்த நிகழ்ச்சியானது ஊவாவெல்லஸ பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் நிஷாந்தி பீரீஸ் அவர்களினால் வழிப்படுத்தப்பட்டது. வரவேற்புரையின் பின்னர் தலைமை அதிதியான பதுளை மாவட்ட செயலாளரினால் உரை நிகழ்த்தப்பட்டது. குறும் காணோளி ஒளிபரப்பப்பட்ட பின்னர் மக்களுக்கான வட்டமேசை கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டது.

**பங்குபற்றுனர்கள்**

முறைசார பிரிவுகளின் கீழ் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் சாவால்கள் இந் நிகழ்ச்சியில் கவனம் செலுத்தப்பட்டது. பதுளை மாவட்ட செயலாளர், ஊவாமாகாணத்தின் சுகாதார அமைச்சின் பணிப்பாளர், ஊவாமாகாணத்தின் பெண்கள் விவகார உதவி செயலாளர், மாகாணசபை வீதி அபிவிருத்தி அமைச்சின் உதவி பணிப்பாளர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் என்போர் அரசாங்க அதிகாரத்தினை சேர்ந்த பிரதிநிதிகளாக பங்குபற்றியிருந்தனர்.

**சவால்கள் மற்றும் பிரச்சினைகள்**

- மெதகமவிலிருந்து வருகைதந்த திருமதி.மல்லவாராச்சி பின்வருமாறு குறிப்பிட்டார். சில பயிற்சி நிகழ்ச்சிகள் அரசாங்க செல்வாக்கினால் பயிற்சியின் பின்னர் அரசாங்கத்தினால் உதவிகளினை வழங்குகின்றது.

- அவர்களின் சுயதொழிலினை பதிவு செய்வதில் சில கடினத்தன்மைகள் காணப்படுவதாக தொழில் நிறுவனர் திருமதி.மனோகரி குறிப்பிட்டார். பெண்ணாக பல பிரச்சினைகளினை எதிர்கொள்வதாகவும் குறிப்பிட்டார். அவர் சுகாதார அதிகாரிகளினால் அச்சுறுத்தப்படுகின்றார்.

- தோட்டப்பெண் தொழிலாளர்களின் பிரதிநிதியான பிரபாத் குமார அவர்கள் பெரும்பாலான தோட்ட தொழிலாளர்கள் மொழிப்பிரச்சினையினை எதிர்கொள்வதாகவும் தங்களின் பிரச்சினைகளினை சொல்ல மற்றும் வெளிப்படுத்தவும் முடியவில்லை என

குறிப்பிட்டார். சில அராங்க உத்தியோகத்தர்கள் எதிர்மறையான செயற்பாட்டினை கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

- சுய தொழில் புரிவோர் கடனினை பெறும் போது ஏற்படும் குறைந்தபட்ச வசதி
- அரசாங்க வங்கிகளின் சுயமுயற்ச்சியாளர்களுக்கான பொருத்தமற்ற தேவைப்பாடுகள்
- அரசாங்கமானது மக்களுக்காக கருவிகளினை வழங்குகின்ற போதிலும் அவர்கள் பயிற்சி நிகழ்சிகளில் ஈடுபடாமை மற்றும் அவர்களுக்கான பயிற்சி நிகழ்சிகளில் ஈடுபடுவதில் கவனம் செலுத்தாத போக்கும் காணப்படுகின்றமை.
- அவசியமான கருவிகளின் பகிர்ந்தளிப்பு மற்றும் நிதி உதவிகள் என்பவை அரசியலிலிருந்து அப்பாற் பட்டதாக காணப்படல் வேண்டும்
- அரசசேவகர்களிடம் இருந்து கிடைக்கும் அனுசரனையின் குறைவு நிலை.
- குறைந்த பட்ச நவீன தொழில்நுட்ப அறிவு.
- விவசாயதுறை தொடர்பான குறைந்தபட்ச அறிவு, அரசாங்கத்தின் அனுசரனை தேவைப்படும் நிலை
- பொருட்களினை விற்பதற்கான முறையான சந்தை இன்மை மற்றும் அவர்கள் கடுமையான போட்டியினை எதிர்நோக்குகின்றமை.
- பயிர்செய்கை பிரிவில் ஈடுபடும் பெண்களின் பங்குபெற்றுவதற்கான உரிமையுடன் தொடர்பான பிரச்சினைகள்.
- வெளிநாட்டில் வேலைபுரியும் பெண்களுடன் தொடர்பான பிரச்சினைகள்
- திவினகமுவ திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நன்மைகள் உடன் காணப்படும் பல பிரச்சினைகள் கலந்துரையாடியிருந்தது.

**அரச அலுவலர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் பரிந்துரைகள்.**

- திவினகமுவ திணைக்களத்தின் வங்கி முகாமையாளர் பின்வருமாறு குறிப்பிட்டார். அவர்களின் வங்கியில் இருந்த 4 பேரினை கொண்ட குழுவினர் கடனினை பெற்றுக் கொள்ள பொறிமுறை காணப்படுவதாக குறிப்பிட்டார். ஆனால் அந்த குழுக்கள் கட்டாயம் செயற்பாட்டுடன் பாராமரிக்கப்பட வேண்டும். சுய தொழிலின் உடைய முழு பொறுப்புடைமையானது அரசாங்கத்துடன் பிணைக்கப்படுவது இல்லை. நிதி உதவியாக அரசாங்கமானது குறித்த அடிப்படை முதலினை வழங்க வேண்டும் .
- யாராவது அரசாங்க உத்தியோகத்தர்கள் இத்தகைய செயற்பாட்டில் ஈடுபட்டால் பாதிக்கப்பட்ட நபர் அதிகாரசபைக்கு முறைப்பாடு செய்ய முடியும். மற்றும் யாராவது ஒருவர் திருப்திப்படாவிட்டால் அவர்கள் மனிதவுரிமை ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்ய முடியும்.

- மாகாணசபை உறுப்பினர்கன் அவரின் கேள்விகளுக்கு பதிலளித்திருந்தனர். எங்களினால் எப்போதும் அரசாங்க உத்தியோகத்தர்களினை கட்டாயப்படுத்த முடியாது. வளங்களினை பகிர்ந்தளிப்பது தொடர்பிலான ஒரு கட்டமைப்பு ஆகும்.

- அவர்கள் மொழிபெயர்பாளர்களினை பெறுவதற்கு எப்போதும் முயற்சி செய்கின்றனர் என குறிப்பிட்டார். கூட்டத்திற்கு அவர்கள் அழைக்கப்படுகின்றனர். அவர்களினை தொடர்ப்பு கொள்வதற்கான விலாசம் குறிப்பிடப்பட்டது. தேவை ஏற்படுபவர்களுக்கு அவர்களினால் உதவி செய்யப்பட முடியும் எனவும் சொல்லப்பட்டது.

### 2.1.3 மட்டக்களப்பு பிராந்திய காரியாலயம்

**அறிமுகம்**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்கழுவின் மட்டக்களப்பு பிராந்திய காரியலயமானது சர்வதேச பெண்கள் தினத்தினை 08.03.2017 அன்று மாநகரசபை மண்டபத்தில் கொண்டாடியதுடன் பிராந்திய ஒருங்கிணைப்பாளர் திரு.ஏ.சி.ஏ.அஸிஸினால் பெண்கள் தினம் தொடர்பான சிறப்புரை வழங்கப்பட்டது.பெண் தலைவர்கள் வட்டமேசை கலந்துரையாடலில் நாளாந்தம் எதிர்கொள்ளும் வெற்றி, தோல்வி மற்றும் சவால்களினை பகிர்ந்துகொண்டதுடன் இந்நிகழ்வானது IWARE பெண்கள் அமைப்பின் தலைவர் திருமதி.அனிசா பர்தாஸ் அவர்களினால் வழிப்படுத்தப்பட்டது.

**பங்குபற்றுனர்கள்**

மேலதிக அரசாங்க அதிபர் திரு.கிரிதரன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டதுடன் முறைசாரா பொருளாதாரதுறையை சேர்ந்த பெண்கள், அரசாங்க மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பெண்கள் அமைப்பு பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

**சவால்கள் மற்றும் பிரச்சனைகள்**

**திருமதி.என்.எப்.பர்வின்-** முந்திரி உற்பத்தி விற்பனையாளர்கள் தங்களின் கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தார். 80 தொழிலாளர்கள் உற்பத்தி தொழிற்சாலையில் தொழில் புரிவதுடன் அவர்களுகது போதியளவு சம்பளம் கிடைப்பதில்லை உள்ளூர் முந்திரியின விலை உயர்வானது அவற்றினை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யலாம் இருப்பினும் அதன்போது பல்வேறு சிரமங்களுக்க முகங்கொடுக்க வேண்டியுள்ளது. அதேபோல் குறித்த நிறுவனத்திற்கமைய இந்த முந்திரியை இறக்குமதி செய்வது சம்பந்தமாக அரசியல்வாதிகளின் தலையீடு காணப்படுவதுடன் அவர்கள் அதில் இலாபமடைகின்றனர் எனவும் தெரிவித்தனர். அதேபோல இந்த பெண்களிற்காக குறித்த அனுமதிபத்திரம் வழங்கப்படுமாயின் மலிவான விலையில் இறக்குமதி செய்ய சந்தர்ப்பம் கிடைக்கும்.

பொதுவான கருத்து யாதெனில் இறக்குமதி செய்யும்போது அரசியல்வாதிகளின் ஆதரவு அவசியமாகும் இருப்பினும் எதிர்காலத்தில் இது திருத்தப்படலாம்.

**திருமதி.வி.பவானி** பனை உற்பத்தி விற்பனையாளர் என்றவகையில் கருத்துக்களை தெரிவித்தார். அவர்களின் கிராமத்தில் இந்த உற்பத்தியானது பெண்களின் பகுதி நேர தொழிலாவதுடன் அவர்கள் பல்வேறு சாவால்களினை எதிர்நோக்குகின்றனர். மழைகாலங்களின் போது உற்பத்திபொருட்கள் சேதங்களிற்கு உட்படுகின்றமையானது விற்பனை வீழ்ச்சியடைய காரணமாக அமைகின்றதெனத் தெரிவித்தார். காடழிப்பின் காரணமாக பனைமரங்கள் அழிக்கப்படுவதிகனால் பனை ஓலைகளை பெற்றுக்கொள்வது பிரச்சனையாக உள்ளது. மின்சார இணைப்பினை வழங்கும் செயற்றிட்டத்தின் காரணமாக பெரும்பாலான பனை மரங்கள் அழிக்கப்படுகின்றது. அதேபோல பல மரங்கள் சுனாமியின் போது அழிக்கப்பட்டன. இடைத்தரகர்கள் விற்பனையுடன் சம்பந்தப்படுவதினால் மேலும் பிரச்சனையாகும்.

**திருமதி.பி.சாந்தி, திருமதி.ஆர்.குணேஸ்வரி மற்றும் ஆர்.கிரிஷ்ணவேனி** மட்பாண்ட உற்பத்தியுடன் தொடர்ப்பட்ட பெண்களாவார். அவர்கள் மூலப்பொருட்களினை பெற்றுக்கொள்வதில் சிரமமாகவுள்ளதுடன் தரமான மூலப்பொருட்கள் இல்லாததுடன் போக்குவரத்தின் போதும் பொருட்கள் சேதத்திற்கு உட்படுவதினால் உற்பத்திகளை விற்பனை செய்ய முடியாதுள்ளதுதெனக் குறிப்பிட்டனர்.

பொதுவான கருத்தாகவிருப்பது மட்பாண்ட உற்பத்தியில் ஈடுபட்டுள்ள குடும்பங்கள் அதிக இலாபீட்டுவதாக அரசாங்கம் கருதுவதாகவும் இவர்கள் தொடர்பாக எதுவித உதவித்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. மேலும் களி விற்பனையில் இடைத்தரகர்களின் செயற்பாடுகள் பிரச்சனையாக உள்ளது.

**திருமதி.பி.சர்மிளா** தூப குச்சி உற்பத்தியாளர் தெரிவிப்பதாவது மட்டக்களப்பு பிரதேசத்தில் மூலப்பொருட்களினை பெற்றுக்கொள்வது மிகவும் கடினமாகவுள்ளது. கொழும்பிலிருந்து மூலப்பொருட்களினை பெற்றுக்கொள்வதால் விலை அதிகாமாகவுள்ளது. உற்பத்திகள் தயாராக இருந்தால் கூட அவற்றினை பொதியிடலுக்கான உபகரணங்கள் மற்றும் அச்சிடுதலிற்கான செலவீனம் காரணமாக விலை உயர்வாக உள்ளதுடன் இந்த பிரதேசத்தில் கடும் போட்டியும் நிலவுகின்றது.

**செல்வி.எ.எப்.ஷில்ஹனா** கடல் சிப்பிகளிலான கைப்பணி உற்பத்தியாளர். மூலப்பொருட்களினை பெற்றுக்கொள்வதில் பல்வேறு போக்குவரத்து பிரச்சினை காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார். உற்பத்தியின் ஆரம்பம் முதல் முடிவுற்ற உற்பத்தியை சந்தைக்கு வழங்கும் வரை இந்த பிரச்சனை சிரமங்கள் காணப்படகின்றது.

**அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளின் கருதுக்கள் / பதில்கள்**

- மாநகர சபையின் ஆணையாளரின் கருத்திற்கமைய களிமண்ணை பெற்றுக்கொள்ளும் அனுமதியை மாவட்ட செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியுமென்பதுடன் அவர்களுடைய பிரதேசத்தினுள் களிமண்ணை பெற்றுக்கொள்ளவும் முடியுமெனத் தெரிவித்தார். இவ் அனுமதி பத்திரம் முறைப்படியானதாகும்.

- மாவட்ட சமூக சேவை அலுவலரின் கருத்திற்கமைய நுண் வியாபாரத்தினை ஆரம்பிப்பதற்கு 25000 ரூபாயை வழங்குவதுடன் உற்பத்தியின்போது எந்தவிதமான சட்டரீதியான தடைகள் எதுவும் காணப்படாது எனவும் தெரிவித்தார். அதேவேளை குறித்த அனுமதியை பெற்றுக்கொள்வார்களாயின் பிரச்சனைகள் எதுவும் இருக்காது எனத் தெரிவித்தார்.

- மீன்பிடி மற்றும் நீர்வாழ் வளங்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளரின் கருத்திற்கமைய கடற்சிப்பி மூலப்பொருட்களை சம்பந்தமான இப்பிரச்சனை தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளது. . இந்த பயிற்சி நிகழ்வுகள் வேலை செய்யும் பெண்களை மையமாகக்கொண்டு இடம்பெற்றது. அதேபோல அம்பாறை மாவட்டத்தின் தம்பிலுவில் கிராமத்தில் இதற்கான மூலப்பொருட்கள் கிடைப்பதாகவும் அவற்றினை பெற்றுக்கொள்ள உதவுவதாகவும் குறிப்பிட்டார்.

- புனை அபிவிருத்திசபையின் மாவட்ட முகாமையாளர் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறத்தாழ 2500 உற்பத்தியாளர்கள் இருப்பதுடன் கிராமிய மட்டத்தின் உள்ளேயே வியாபாரம் செய்ய சந்தர்ப்பம் உள்ளது. இந்த உற்பத்தி பொருட்கள் சுற்றுலா பயணிகளுக்கு விற்பனை செய்ய வாய்ப்புள்ளது. ஏதேனும் பிரச்சினைகள் காணப்பட்டால் பனை அபிவிருத்தி சபையிலுள்ள தன்னை தொடர்ப்பு கொள்ளும்படி தெரிவித்தார்.

### 2.1.4 அம்பாறை பிராந்திய காரியாலயம்

**அறிமுகம்**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அம்பாறை பிராந்திய காரியலயமானது சர்வதேச பெண்கள் தினத்தினை 08.03.2017 அன்று பிராந்திய அலுவலக அரங்கில் நடாத்தியது. பெண்கள் தினத்தை கொண்டாடுவாதற்கான வரலாறு சம்பந்தமான காணொளி ஒளிபரப்பப்பட்டதுடன் மற்றுமொரு சர்வதேச பெண்கள் தினக் கருப்பொருளுடன் தொடர்பான காட்சிப்படுத்தல் இடம்பெற்றது. அத்துடன் நிலையான அபிவிருத்தி இலக்குகள் 4 மற்றும் 5 இந்த முன்வைப்பினூடாக அவதானத்திற்கு கொண்டுவரப்பட்டது.

**பங்குபற்றுனர்கள்**

முறைசார பொருளாதார பிரிவுகளின் தொழில்புரிகின்ற பெண்கள் அரசாங்க உத்தியோகத்தர்களான விவசாய பணிப்பாளர், பிரதேச செயலாளர், தொழில்பயிற்சி உத்தியோகத்தர், கிராமிய அபிவிருத்தி அலுவலகர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொலிஸின் சிறுவர் மற்றும் பெண்களின் பிரிவு மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் இந்த கலந்துரையாடலில் பங்குபற்றியிருந்தனர்.

**சவால்கள் மற்றும் பிரச்சனைகள்**

1. குறித்த துறைகளிற்கான முறையான பயிற்சிகள் வழங்கமுடியாமை
2. கைத்தொழிலிற்கு முதலீடு செய்வதற்கான நிதி வசதியின்மை மற்றும் கடனினை பெற்றுக்கொள்வதற்கான வசதியின்மை
3. உற்பத்தி பொருட்களினை விற்பதிலுள்ள சிரமங்கள்
4. ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் மற்றும் சேமநல நிதியம் என்பன தொடர்பில் குறைந்த அறிவு நிலை
5. 40 வயதிற்கு மேற்பட்ட பெண்களை முறைசார பொருளாதாரதுறையில் பதிவு செய்வதில் ஏற்படும் சிக்கல்கள்
6. முறைசார பிரிவுகளில் ஈடுபட்டுள்ள பெண்களின் மத்தியில் முறையான வலையமைப்பு மற்றும் தொடர்பு காணப்படாமை.

**அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளின் கருதுக்கள் / பதில்கள்**

- விவசாய திணைக்களம் தொழில் பயிற்சி மத்தியநிலையம் ஊடாக வழங்கும் பல்வேறு பயிற்சி நிகழ்வுகள் கிராமிய பெண்கள் சார்பாகவும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

- திவிநெகும திட்டத்தின் பெண்கள் அபிவிருத்தி பிரிவு பிரதிநிதி குறிப்பிடுகையில் சில கடன் வசதிகள் அரசாங்க வங்கி ஊடாக பிரதேச செயலகம் ஊடாக செயற்படுத்தப்படுகின்றதுடன் பெண் சேவைநாடுனர்கள் அது தொடர்பாக எந்தவித பாரபட்சமின்றி பெற்றுக்கொள்ள முடியும்.

- திவிநெகும அபிவிருத்தி திட்டத்தின் பெண்கள் அபிவிருத்தி அலுவலகர்களுக்கு அமைய போக்குவரத்து செலவு வழங்கப்படாதுவிடத்து பெரும்பாலான முறைசாரா தொழிலிலுள்ள பெண்கள் பயிற்சி நிகழ்வுகளிற்கு சமூகமளிப்பதில்லை எனத் தெரிவித்தனர். பெரும்பாலான பெண் சுயதொழிலாளர்கள் முறையான திட்டங்கள் இல்லாமல் வித்தியாசமான திட்டங்களினை ஆரம்பிக்கின்றனர் என மேலும் சுட்டிக்காட்டினர்.

- பெண் மற்றும் சிறுவர் பிரிவின் காரியாலய பொறுப்பாளர் முறைசார தொழிலில் ஈடுபடும் பெண்களின் பாதுகாப்பு தொடர்பினில் பேசினார்.

- முறைசார துறையிலுள்ள பெண்கள் சகலரையும் ஒன்றினைத்து வலையமைப்பினை உருவாக்கும் செயற்பாட்டினை ஆரம்பிக்க வேண்டுமென அரசாங்க உத்தியோகத்தர்கள் கருத்துரைத்தனர்.

**2.1.5 திருகோணமலை பிராந்திய காரியாலயம்**

**அறிமுகம்**

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் திருகோணமலை பிராந்திய காரியலயமானது சர்வதேச பெண்கள் தினத்தினை 08.03.2017 அன்று திருகோணமலை நகரசபையின் குளக்கோட்டன் கலாச்சார மண்டபத்தில் ஏற்பாடுசெய்திருந்தது.

**பங்குபற்றுனர்கள்**

இந்நிகழ்வினில் தொழில் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் திரு.பண்டாரநாயக்க, கிழக்கு மாகாணத்தின் கிராமிய கைத்தொழில் திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர் திரு.எம்.எம்.நுபிஸ், மனிதவுரிமைகளுக்கான மேம்பாடு மற்றும் பாதுகாப்பு நிலையத்தின்

நிறைவேற்று அதிகாரி பாதிரியார் வணக்கத்திற்குரிய யோகேஸ்வரன் சட்ட உதவி ஆணைக்குழுவைச் சேர்ந்த சட்டத்தரணி திருமதி லக்ஸ்மிஸ்ரீ, திகோணமலை மாவட்ட பெண்கள் அமைப்புக்கள் உட்படஅரசாங்க அதிகாரிகள், அரசசாரா நிறுவனங்களின் பிரதிநிதிகள், சிவில் சமூக பிரதிநிதிகள், பெண்கள் சார் அமைப்புக்கள், மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் சிறு கைத்தொழிலில் ஈடுபடும் மக்கள் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

வட்டமேசை கலந்துரையாடலிற்காக சமூகமளித்த பெண்கள் பனை உற்பத்தி, பயனற்ற பொருட்கள் ஊடாக செய்யப்படும் கைத்தெறிகள், கைகளினால் செய்யப்படும் பொருட்கள், தேங்காய் எண்ணொய் உற்பத்தி, தயிர் உற்பத்தி மற்றும் பாதணி உற்பத்தி முதலிய சுய கைத்தொழில் முயற்சியினை சேர்ந்தவர்களாவார்.

**சவால்கள் மற்றும் பிரச்சனைகள்**

- பொருட்களினை உள்ளுர் சந்தைகளில் சந்தைப்படுத்தும் போது சிறு அளவிலான வியாபரிகளும் அதே பொருட்களினை குறைவான விலையில் வழங்குவதனால் இங்கு பெரிய போட்டி காணப்படுகின்றது.

- நிலையான சந்தை இல்லாமையினால் பொருட்களை விற்பனை செய்வதில் சிரமங்கள் உள்ளது.

**அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளின் கருதுக்கள் / பதில்கள்**

- வர்த்தகா் சங்கம் திருகோணமலை மாவட்டத்தில் சந்தை மத்தியநிலையத்தை ஆரம்பிக்கும் திட்டம் தற்போது தயாரித்துள்ளதாக தெரிவித்தனா். இது தொடா்பாக வா்த்தக சங்கம் திட்ட முன்மொழிவை முன்வைத்துள்ளது. அத்துடன் இது ஏற்றுக்கொள்ளப்படுமாக இருந்தால் சிறு கைத்தொழிலில் ஈடுபடும் பெண்களிற்கு நல்ல வளமாக அமைய முடியும்.

- தொழில் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் திரு.பண்டாரநாயக்க அவர்கள் சிறு கைத்தொழில் ஈடுபடும் மக்கள் தொழில் திணைக்களத்தினை மற்றும் அதன் சேவையினை எவ்வாறு அணுக முடியும் என்பது பற்றி விளக்கியிருந்தாா்.

- கிழக்கு மாகாணத்தின் கிராமிய கைத்தொழில் திணைக்களத்தின் பிரதி பணிப்பாளர் திரு.எம்.எம்.நுபிஸ் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் மற்றும் திட்ட நடைமுறை பற்றி விளக்கமளித்தார். அவர் மேலும் மக்கள் விரும்பினால் அங்கு வந்து பயிற்சிகளினையும் பெற்றுக்கொள்ள முடியும் என ஆலோசனை வழங்கினார்.

- மனிதவுரிமைகளுக்கான மேம்பாடு மற்றும் பாதுகாப்பு நிலையத்தின் நிறைவேற்று அதிகாரி பாதிரியார் வணக்கத்திற்குரிய யோகேஸ்வரன் மற்றும் சட்ட உதவி ஆணைக்குழுவைச் சேர்ந்த திருமதி லக்ஸ்மிஸ்ரீ ஆகியோர் சட்டரீதியான ஆலோசனையினை வழங்கினர்.

**2.1.6 கல்முனை பிராந்திய காரியாலயம்**

**அறிமுகம்**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய காரியலயமானது சர்வதேச பெண்கள் தினத்தினை 08.03.2017 அன்று கிறிஸ்டா இல்லத்தில் நடாத்தியது.

பிராந்திய ஒருங்கிணைப்பாளர் மற்றும் பிரதம விருந்தினர் திருமதி எஸ். சிவப்பிரியா (பணிப்பாளர் - கலாச்சார திணைக்களம்) உரை நிகழ்தினர். AHAM அமைப்பின் திருமதி நிசாந்தனியினால் இந்நிகழ்வு வழிப்படுத்தப்பட்டது.

**பங்குபற்றுனர்கள்**

பிரதேசத்திலுள்ள விவசாயம், மீன்பிடி, உள்ளுர் வேலை, சுயதொழில், மண்பாண்ட உற்பத்தி, வெளிநாட்டு வேலையாட்கள், அழகுக்கலை மற்றும் கைப்பணி உற்பத்தியில் ஈடுபடுகின்ற பெண்கள், பெண்கள் அமைப்புக்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள்,சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஒரங்கிணைப்பாளர், சமூக சேவைத்திணைக்கள உத்தியோகத்தர்கள் பொலிஸ் உத்தியோகத்தர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் உட்பட 194 பங்குபற்றுனர்கள் இந்நிகழ்வில் பங்குகொண்டனர்.

**சவால்கள் மற்றும் பிரச்சனைகள்**

- குடும்ப பொறுப்பை தாங்கல் மற்றும் கலாசார தடைகள் காணப்படல்
- நிதி முதலீட்டை பெற்றுக் கொள்வதில் வரையறுக்கப்பட்ட தன்மை
- உயர் தொழிலாளர் செலவீனமும் நிதி தெளிவின்மையும்

- அடிப்படை மூலத்திற்கான உயர் செலவு
- அவர்களுக்கு பொருட்களினை விற்பனை செய்வதற்கான முறையான சந்தை காணப்படாமை, நியாயமான விலையில் பொருட்களினை கடின சந்தை போட்டியின் மத்தியில் விற்க முடியாத தன்மை, பெரும்பாலான சந்தர்பங்களில் வாடிக்கையாளர்களினை மற்றும் விற்பனையாளர்களினை சந்திக்க செல்வதில்லை விற்பனையாளர்களே வந்து அவர்களுக்கு ஏற்ற விலையில் பொருட்களினை பெற்றுச்செல்கின்ற நிலைமை தான் காணப்படுகின்றது.
- நவீன தொழிநுட்பங்களினை குறைந்தளவில் அணுகும் தன்மை
- உயர் போக்குவரத்து செலவீனம்
- குறைந்தளவிலான வியாபார வலையமைப்பு
- அவர்களின் வியாபார நோக்கங்களுக்கான கடன் தொகைகளினை பெற்றுக் கொள்வது வங்கிகளின் நிபந்தனைகள் காரணமாக பெற்றுக் கொள்வதில் கடினத் தன்மை
- அரச பகுதிகளிலிருந்து கிடைக்கும் குறைந்தளவிலான அனுசரணை

**வட்டமேசை கலந்துரையாடலில் அரச அதிகாரிகள் மற்றும் சிவில் சமூக உத்தியோகத்தர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட சில பரிந்துரைகள்**

- முறைசாரா பிரிவுகளில் பெண்கள் தம் அதிகார நிலையினை மேலோங்க செய்வதற்கான அரசாங்க தேசிய வரவு செலவு திட்டத்தில் விஷேட கரிசனை மற்றும் ஒதுக்கீடுகளினை மேற்கொள்ளல் வேண்டும்.
- முறைசாரா பிரிவுகளில் ஈடுபடும் பெண்களின் தேவைகளினை இலங்கையின் வியாபார கொள்கையில் முக்கியமான உருவாக்க வேண்டும்
- முறைசாரா பிரிவுகளில் பெண்களின் பங்களிப்பினை ஊக்கப்படுத்துவதற்காக பிராந்திய, மாவட்ட, மற்றும் தேசிய ரீதியில் கண்காட்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளினை மேற்கொள்ளல்.
- பெண்களின் ஈடுபாடு பின்வருவனவற்றில் வியாபார பேச்சுவார்தைகளில் பங்களிப்பினை மேற்கொள்ளல், மூலங்களினை அணுகிறமை, தேசிய வியாபார கொள்கையினை கட்டுப்படுத்தல், வியாபார உடன்படிக்கைகளினை தீர்மானித்தல், பிரிவுகளில் ஏற்படும் பிரச்சினைகளின் மதீப்பீடு ஆகியவை காணப்படல் வேண்டும்
- விஷேட வரவு செலவு திட்டத்தின் ஒதுக்கீட்டிற்கு அமைவாக விஷேட நிகழ்ச்சிகள் மற்றும் கொள்கைகளினை தொடர்ச்சியாக தொழிலினை வழங்குவதனை நோக்கமாக கொண்டு விஷேட நிகழ்ச்சிகளினையும் மற்றும் கொள்கைகளினையும் அபிவிருத்தி செய்தல் வேண்டும்

- பெண்களின் முறைசார கூட்டுறவு அபிவிருத்தி சமூகங்களினை உருவாக்கல் வேண்டும்.

### 2.1.7 மாத்தறை பிராந்திய காரியாலயம்

சர்வதேச மகளிர் தின நிகழ்வினை மாத்தறை பிராந்திய காரியாலயம் 2017 மார்ச் 14 ஆம் திகதி சர்வோதய கேட்போர்கூடத்தில் நிகழ்த்தியது. மாத்தறை பிராந்திய இணைப்பாளர் D.M.R. திசாநாயக்க வரவேற்புரையையும் நிகழ்வு தொடர்பான அறிமுகத்தையும் வழங்கினார். ஊடகவியலாளர் அமாலி ஜயவீர வட்டமேசை கலந்துரையாடலை வழிப்படுத்தினார்.

**பங்குபற்றுனர்கள்**

திவிநெகும மற்றும் சமூர்த்தி பிரதிப்பணிப்பாளர், மத்திய வங்கி பிரதி முகாமையாளர், சட்ட உதவி ஆணைக்குழு பிரதிநிதி, தேசிய இளைஞர் பேரவை முகாமையாளர், ஊடகவியலாளர், சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு பொலிஸ் அதிகாரி, பிராந்திய காரியாலய அதிகாரிகள் மற்றும் தொழில்பயிற்சி அதிகாரசபையில் பயிற்சிபெறும் 50 இற்கு மேற்பட்ட பயிலுனர்கள் இந்நிகழ்வில் பங்குகொண்டனர்.

**சவால்கள் மற்றும் பிரச்சினைகள்**

- திருமதி. சாமிகா தி சில்வா தெரிவிக்கையில் ஆடைகளை தைத்து அரச நிறுவனங்களுக்கு கொடுத்தாலும் பொருத்தமான சந்தைவாய்ப்பு வழங்கப்படுதல் தொடர்பாக அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

- திருமதி மங்களா ஹேவாமத்துமாகே தெரிவித்ததாவது கைப்பை மற்றும் பாடசாலை பை தைத்து கொண்டிருப்பதுடன் தொழில்நுட்ப அறிவு இல்லாமையும் இயந்திரங்கள் இன்மையாலும் உரிய இலக்கினை அடையமுடியாதுள்ளது.

- திருமதி. D.B சந்திரலதா மலர்வளர்ப்பு சம்பந்தமாக விவசாயத்திணைக்களத்தினூடாக தேவையான பயிற்சியை பெற்றுள்ளேன். இருப்பினும் இதனை வளர்பதற்குரிய இடத்தையும் கடனையும் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சவால்களிற்கு முகங்கொடுத்ததுடன் பொலிஸாரினாலும் கைதுசெய்யப்பட்டுள்ளேன் எனத்தெரிவித்தார்.

- H.M. ஞானவதி தான் சுயதொழிலாக ஆடை தைத்தலை செய்து வருகின்றேன். இருப்பினும் வயது முதிர்ந்தவர் என்ற காரணத்தினால் வயதுப்பிரச்சனை காரணமாக சகல வங்கிகளிலும் கடன் பெற முடியாதுள்ளது.

**அரச அலுவலர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் பரிந்துரைகள்**

- சட்ட உதவி ஆணைக்குழுவின் பிரதிநிதி திருமதி ராதிகா பெண்கள் தொடப்பான சட்டங்களை தெளிவுபடுத்தியதுடன் கடன், காப்புறுதி மற்றும் சட்டம் தொடர்பில் பெண்களிற்கு போதுமான அறிவு தேவையென தெரிவித்தார்.

- மத்திய வங்கி பிரதி முகாமையாளர் M.P அருன அவர்கள் தெரிவிக்கையில் நுண்கடன் வசதிகளைக் ்ெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.

- திவிநெகும திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் வயது 18-19 மேற்பட்டவர்களிற்கு சமூர்த்தி கடன் வழங்க முடியும். இருப்பினும் அநேக விவசாயிகள் நவீன தொழில்நுட்பம் தொடர்பான அறிவை விருத்தி செய்வதில்லை. அவர்களுக்க தொழில்நுட்ப அறிவை வழங்குவதுடன் அவர்களின் மனப்பாங்கிலும் மாற்றம் வேண்டும்.

- மாத்தறை இளைஞர் பேரவை முகாமையார் W.J. விதான பத்திரன தெரிவிக்கையில் தேசிய இளைஞர் பேரவையில் இளைஞர்கள் அங்கத்துவத்தினை பெற்றுக்கொள்ள முடியும். அங்கத்தவர்களிற்கு கடன் உதவி வழங்கப்படும்.

- K.D.L மாதவி இலங்கை பெண்கள் பணியகம் மூலம் பெண்கள் கடன் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் பெண்களிற்கான பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களும் உள்ளது.

- S.A.C. தில்காணி (தக்வெல பொலிஸ் நிலையம்) சட்டவிரோதமான கடன் எடுத்தல் செயற்பாடுகள். நடைபாதையில் பொருட்கள் விற்றல் போன்ற முறைப்பாடுகள் பொலிஸிற்கு நித்தம் கிடைக்கின்றது.

### 2.1.8 யாழ்ப்பாணப் பிராந்திய காரியாலயம்

**அறிமுகம்**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்பாண பிராந்திய காரியலயமானது சர்வதேச பெண்கள் தினத்தினை 08.03.2017 அன்று யாழ்பாணம் தொடர்பகம் மண்டபத்தில் கொண்டாடியது.

இந்த நிகழ்வினில் தெரிவு செய்யப்பட்ட வெவ்வேறு வகையான சிறுகைத்தொழில் முயற்சியாளர்களான தையல், உலர் உணவு உற்பத்தி, உலர் கடலுணவு உற்பத்தி, தோல் உற்பத்தி, பயனற்ற பொருட்களில் செய்யப்படும் தலையணை உறைகள் மற்றும் தரைவிரிப்பு உற்பத்தி, பனையிலான கைபணிப்பொருட்கள் உற்பத்தி மற்றும் கால்நடை வளர்ப்பு அவர்களின் அனுபங்கள் சாவால்கள் பிரச்சினைகள் மற்றும் அடைவுகள் முதலியவற்றினை பகிர்ந்து கொண்டனர்.

**பங்குபற்றுனர்கள்**

வட்டமேசைக் கலந்தரையாடலில் திருமதி.சர்மிளா சந்திரதாதன்- செப்பில் அலங்காரம் இடுதல், திருமதி.அன்டனி பெனன்சா சுபாஜினி- கோழி வளர்ப்பு, திருமதி.இதயராஜ் சைலா- உலர் கடலுணவு உற்பத்தி, திருமதி.ஜெகநாதன் சத்தியேஸ்வரி- கால்நடை வளர்ப்பு, திருமதி.சார்லஸ் விஜயரத்தினம் தவச்சிரி- தோல் உற்பத்தி, பனையிலான கைபணிப்பொருட்கள் உற்பத்தி, தலையணை உறைகளின் உற்பத்தி, பயனற்ற பொருட்களில் செய்யப்படும் தரைவிரிப்பு உற்பத்தி, திருமதி.ஜெயசெல்வம் இராஜகலா- உலர் கடலுணவு உற்பத்தி, திருமதி.கேதிஸ்வரன் சுதர்சினி- உணவு உற்பத்தி மற்றும் திருமதி.தர்மரத்தினம் மங்கையர்கரசி- கோழிவளர்ப்பு மற்றும் தையல் ஆகியோர் பங்குபற்றியதுடன் திருமதி.எஸ்.தேய்வேந்திரன் மேலதிக அரசாங்க அதிபர் யாழ்ப்பாணம், திருமதி எம்.ஜெகதீஸ்வரன் பிரதி தொழில் ஆணையாளர் யாழ்ப்பாணம், திரு. கே.கே.கோபாலகிருஸ்ணன் முகாமையாளர் பனை அபிவிருத்தி சபை யாழ்ப்பாணம், திருமதி.எம்.கோசலை வழக்கறிஞர் மற்றும் விரிவுரையாளர், சட்ட பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உட்பட அரசபிரிவு, அரசசாரா பிரிவு, சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பெண் சமூகத்தினை சேர்ந்தோர் என அண்ணளவாக 90 பேர் பங்குபற்றியிருந்தனர்.

**சவால்கள் மற்றும் பிரச்சனைகள்**

- இங்கு சில குடும்பங்கள் பெண்கள் தலைமைத்துவ குடும்பங்களும் மற்றயவை பெண்கள் திருமணம் ஆகாத குடும்பங்களும் ஆகும். சில பெண்கள் தங்களின் கணவனை இழந்தவராக உள்ளனர். இதனால் அவர்கள் தங்கள் நாளாந்த வாழ்கையில் பல இன்னல்களினை முகம் கொடுக்க வேண்டி இருக்கின்றது. ஒரு

சில பெண்கள் தங்கள் கணவனின் இறப்பிற்கு பின்னர் தற்கொலை முயற்சிகளும் மேற்கொண்டுள்ளனர்.

- இந்த சூழ்நிலைகளின் கீழ் அவர்கள் வெற்றிபெறுவார்கள் என ஒருபோதும் சிந்தித்ததில்லை. ஆனால் தற்போது அவர்கள் தங்கள் வாழ்கையினை சுய முயற்சியினால் அபிவிருத்தி செய்துள்ளனர். அவர்கள் தங்களின் தொழிலின் ஊடகவே இதனை ஆரம்பிக்க வேண்டும் என்பதனை அறிந்திருந்தனர்.

- பிறருடைய உதவி இல்லாமல் தங்களின் வேலைகளினை செய்ய வேண்டியதாக காணப்படுகின்றது. மக்கள் பெரும்பாலும் உள்ளூர் பொருட்களில் நாட்டமின்மையினால் உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கான சந்தைப்படுத்தலில் சிக்கல்களிற்கு முகங்கொடுக்கவேண்டியுள்ளது.

**அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளின் கருதுக்கள் / பதில்கள்**

- சிவில் அமைப்புக்கள் இத்தகைய பெண் தொழில் நிறுவனங்களில் வாய்ப்புகளினை வழங்கி அபிவிருத்தி செய்யவும் அத்தகைய பெண்களுக்கு நிதி உதவிகளினை வழங்கவும் வாக்குறுதி அளித்திருந்தது.

### 2.1.9 கண்டி பிராந்திய காரியாலயம்

**அறிமுகம்**

கண்டி பிராந்திய காரியலயமானது சர்வதேச பெண்கள் தினத்தினை 08.03.2017 அன்று கிப்பிட்டிபோல அரங்கில் கொண்டாடியது.

**பங்குபற்றுனர்கள்**

இந்நிகழ்ச்சியில்100 இற்கும் மேற்பட்ட அரச மற்றும் அரசசாரா அமைப்புக்களின் உறுப்பினர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பெண்கள் அமைப்புக்களின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். அத்துடன் வெவ்வேறுபட்ட முறைசாரா பிரிவுகளின் கீழ் தொழிற்படும் பெண்களின் பிரச்சினைகளினை கவனம் செலுத்தப்பட்டது. வரவேற்பு உரையானது கண்டி பிராந்திய அலுவலகத்தின் ஒருங்கிணைப்பாளர் திருமதி.எச்கே.விதானா அவர்களினால் வழங்கப்பட்டது. அவர் மக்களுக்கான கலந்துரையாடலினை ஆரம்பித்துவைத்தார்.

**சவால்கள் மற்றும் பிரச்சினைகள்**

- பாராளுமன்றத்தில் பெண் பிரதிநிதிகள் அதிகரிக்கப்பட வேண்டும். அதன் பிரதான தடை யாதெனில் மற்றைய பெண்ணுக்காக வாக்கினை பாவிப்பதற்கான எதிர்மறையான செயற்பாடாகும்.
- தாவர நடுகை பிரிவினை சேர்ந்த தொழிலாளர்கள் குறைந்த அளவாக காணப்படும் வசதி, பாலியல் துஷ்பிரயோகம் என்பன தங்களின் நாளாந்த வாழ்கையில் காணக்கூடியதாக இருக்கும் பிரதான பிரச்சினைகள் என குறிப்பிட்டிருந்தனர்.

- இயலாமையுடைய பெண்கள், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் விதவைப்பெண்கள் என்போருக்கு அதிகாரமளிக்கப்பட வேண்டும்.
- 16-18 வயதிற்கிடையிலான பெண்பிள்ளைகளினை பாதுகாக்க சட்டம் மாற்றப்பட வேண்டும் என்பதுடனும் பொதுவாக எல்லோரும் அரசாங்கத்துடன் ஒத்திணைந்தனர்.

**அரச அலுவலர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களின் பரிந்துரைகள்**

- அரசாங்க தாதியர் சங்கத்தின் தலைவர் தேவிகா கோடித்துவக்கு அவர்கள் அவரின் நோக்கினை வெளிப்படுத்தியிருந்தனர். இங்கு எந்த பாகுபாடும் இல்லை என குறிப்பிட்டிருந்தார். பாராளுமன்றத்தில் பெண் பிரதிநிதிகள் அதிகரிக்கப்பட வேண்டும்.

அதன் பிரதான தடை யாதெனில் மற்றைய பெண்ணுக்காக வாக்கினை பாவிப்பதற்கான எதிர்மறையான செயற்பாடாகும்

- கண்டி பிரதேச செயலாளர் பிரிவின் உதவி செயலாளர் சில தடைகள் குறிப்பாக கலாசாரம், பாலின பிரச்சினை மற்றும் முன்னோக்கி செயற்படுவது தடுக்கப்படுவது என்பன காணப்படுவதாக குறிப்பிட்டார்.

- பிரதி தொழில் ஆணையாளர் கூட இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருந்தார். பெண்தொழிலாளர்களுக்கு உதவி செய்வதற்கு நாளாந்த பராமரிப்பு நிலையங்களினை பாராமரிப்தற்காக பொறிமுறையினை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் விளக்கமளித்திருந்தார்.

- இறுதியாக பெண்களுக்கு மரியாதை மற்றும் சுதந்திரம் கொண்ட வாழ்கை அவசியம் வேண்டும் மற்றும் அவர்களினை பாதுகாக்க அனைவருக்கும் பொறுப்புடைமை காணப்படுகின்றது என இக் கலந்துரையாடல் விளக்கியிருந்தது.

**3.0 முறைசாரா தொழிற்துறையிலுள்ள பெண்களின் பொதுப்பிரச்சினைகள்/ சவால்கள் - பொது இணங்காணலும் முடிவுரையும்.**

2017 ஆம் ஆண்டின் சர்வதேச மகளிர் தினத்தை தழுவி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பிரதான காரியாலயம் மற்றும் பிராந்திய காரியாலயங்களினூடாக ஏற்பாடு செய்த வட்டமேசை கலந்துரையாடலில் முறைசாரா தொழிற்துறையில் ஈடுபடுகின்ற பெண்கள் தாம் முகம்கொடுக்கின்ற பிரச்சனைகள், சவால்கள் மற்றும் குறிக்கோள்கள் தொடர்பான கருத்துக்களை தெரிவித்தனர். இவ்வட்டமேசைக் கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களை மீளாய்வுசெய்த பின்னர் கீழ்காணப்படும் முடிவுக்கு வரக்கூடியதாக இருந்தது.

அ) சகல பிரதேசங்களிலும் சகல துறைகளிலும் பெண்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனையாக இருப்பது சந்தைவாய்ப்பு இல்லாமையாகும். இதன்போது பெண்கள் என்பதினால் சந்தைவாய்ப்பு குறைவாக இருப்பதுடன் விலை தொடர்பாக பேரம் பேசுவதிலும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதை அவதானிக்க முடிகின்றது. மேலும் பொதுவான பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவதன் காரணமாக முறைசாரா பொருளாதார துறையினால் உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்தி பொருட்களிற்கான தேசிய சந்தையை நடாத்தி செல்வதில் சிரமங்கள் உள்ளன.

ஆ) பெண்களிற்கு வங்கி மற்றும் ஏனைய நிதி நிறுவனங்கள் மூலமாக கடன் உதவிகள் பெறுவதிலுள்ள பிரச்சனை காரணமாக உற்பத்தியை அதிகரிப்பதில் தடங்களாக உள்ளது. அரசாங்கத்தின் மூலம் முறைசாரா தொழிற்துறையினருக்கு கடன் வழங்கும் முறைமை அறிமுகப்படுத்தியிருப்பினும் அவ்வசதிகளை இலகுவாக பெண்கள் அணுகமுடியாதுள்ளதால் அதன் மூலம் பெண்களிற்கு எவ்வித பிரதிபலனும் கிடைக்கவில்லை. அவற்றிலுள்ள நிபந்தனைகள் பெண்களின் யதார்த்த வாழ்க்கைக்கு பொருத்தமற்றதாக இருப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. விவசாயத்துறையில் காணி உரிமை ஆவணம் வங்கிகளினால் பரிசீலிக்கப்படுவதுடன் பெரும்பாலும் கணவரின் பெயரில் இருப்பதன் அடிப்படையில் பெண்களிற்கு கடன் வழங்க மறுக்கப்படுவதாக தெரியவருகின்றது. வேறு முறைசாரா பொருளாதார துறையிலுள்ள பெரும்பாலான பெண்களிற்கு கடன்வசதிகளை பெற்றுக்கொள்ளும்போது பிணையாளர் வைப்பு அவசியம் அவரின் பெயரில் ஆதனங்கள் இல்லாமை பிரச்சனையாக இருக்கின்றது. அத்தோடு வயது முதிர்ந்த பெண்களிற்கு முதுமை காரணமாக கடன்வசதிகளை பெற்றக்கொள்ள தடங்கல் இருப்பதுடன் மேலும் அவ்வாறு பெற்றுக்கொண்ட கடனை உரிய முகாமைத்துவத்துடன் பாவிப்பது சம்பந்தமாக விழிப்புணர்வின்மை பெண்களிடையே காணப்படுகின்றது. மேலும் முறைசாரா நுண்கடன் வழங்கம் கம்பனிகள் தொழில் செய்யும் பெண்களை பாரிய கடன்சுமைக்குள் சிறைப்படுத்துவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

இ) கிராமப் பிரதேசங்களில் உரிய முறையில் வளங்கள் பகிரப்படாமையும் பெண் விவசாயிகள் முகம் கொடுக்கும் பிரச்சனையாகும். அதேபோல இச்செயற்பாடுகளில் இடம்பெறுகின்ற அரசியல் தலையீடு காரணமாக மிகவும் பின்தங்கியுள்ள நபர்களிற்கு வளங்கள் மற்றும் நிவாரணங்கள் கிடைக்காமையானது மிகப்பாரதூரமானதாக இருப்பது தெரியவருகின்றது.

ஈ) பெரும்பாலான பிரதேச காரியாலயங்களினூடாக முன்வைக்கப்பட்ட கருத்து, பெண்கள் சுயதொழில் செய்யும் துறைகளிற்குரிய மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதில் அதிகளவு செலவு செய்ய வேண்டியுள்ளதுடன் மூலப்பொருட்களை எடுத்து செல்வதற்கான போக்குவரத்து செலவும் அதிகமாகவுள்ளதும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனையாக குறிப்பிடப்பட்டது.

உ) பெண்களிடையே காணப்படுகின்ற மற்றுமொரு பிரச்சனையாக இருப்பது மந்தபோசணை நிலைமையாகும். இது கூடுதலாக கிராமிய விவசாயப்பகுதிகளிலும், பெருந்தோட்டங்களிலும் மற்றும் சுதந்திர வர்த்தக வலயங்களிலும் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊ) பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வசதிகளை வழங்க வேண்டிய அரச அதிகாரிகள் முறைசாரா துறையிலுள்ள பெண்களை கவனத்திற்கொள்வதில்லை என்பதுடன் அவர்களுக்குரிய தேவையான வசதிகளையும் செய்து கொடுப்பதில்லை என்பதும் அவதானத்திற்கு கொண்டுவரப்படவேண்டு மென தெரியவந்துள்ளது. குடும்ப தலைவராக அரச உத்தியோகத்தர்களால் கணவன் கருதுதப்படுவதன் காரணத்தால் நிவாரணங்களை கணவன் பெற்று முறையற்ற விதத்தில் பாவிப்பது தெரியவந்துள்ளது.

எ) இந்த வட்டமேசை கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட மற்றுமொரு ஆலோசனை என்னவெனில் நவீன தொழில்நுட்பத்தினை பாவிப்பதிலுள்ள பிரச்சனையாகும். உற்பத்தித்துறையில் அதிகரிப்பை ஏற்படுத்த உற்பத்தி செயன்முறையை மேலும் முன்னேற்ற நவீன தொழில்நுட்பங்களைப் பாவிக்காதிருத்தல் மற்றும் அது தொடர்பில் போதுமான அறிவை பெண்களிற்கு வழங்காமை கண்டறியப்பட்டுள்ளது.

ஏ) அனைத்துப் பெண்களிற்கும் பொதுவான பிரச்சனையாக இருப்பது பெண்கள் தொடர்பாக கொள்கை தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் அவர்களை கவனத்திற்கொள்ளாமையும் அது தொடர்பில் பங்குகொள்வதற்கு பெண்களிற்கு சந்தர்ப்பம் வழங்காமையுமாகும்.

ஒ) விசேட துறைகளிலுள்ள பிரச்சனைகள் தொடர்பாக விசாரிக்கும் போது தோட்டத்துறையினர் மொழி பிரச்சனை, போதுமான வாழ்க்கைத்தரம் இன்மை போன்ற பிரச்சனைகளும் தோட்டத்துறை மற்றும் சுதந்திர வர்த்தகவலயப் பெண்களிற்கு பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்புக்களிற்கு உள்ளாகின்றனர் என்பதும் தெரியவந்துள்ளது.

ஓ) மேலும் இயலாமையுடைய பெண்கள் பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடும் போது தொடர்பாடல், போதிய வசதிகள் கிடைக்காமை மற்றும் போக்குவரத்து போன்ற பிரச்சனைகளிற்கும் முகம் கொடுக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஔ) காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டம் போன்ற பெண்களை புறக்கணிப்பிற்கு உள்ளாக்கும் தனியார் சட்டங்கள் திருத்தம் அதேபோல தோட்டத்துறை பெண்கள் சம்பந்தமான சட்டங்கள் இன்னும் திருத்தப்படவில்லை என்பதும் பிரச்சனைக்குரியதாகும்.

அஅ) யுத்தம் காரணமாக வடக்கில் அதேபோல தெற்கில் விதவைகளாக்கப்பட்ட பெண்கள் புறக்கணிப்புக்கு ஆளாக்கப்படுவதும் சமூகம் மற்றும் அரசாங்கம் அவர்கள் தொடர்பில் கவனம் கொள்ளாதிருப்பதும் மேலும் அவர்கள் வலுவூட்டப்பட வேண்டிய தேவையுமுள்ளது.

அஆ) இந்நிகழ்வின்போது முறைசார் மற்றும் முறைசாரா துறையில் பெண்கள் முகங்கொடுக்கின்ற பிரச்சனையாக கவனத்திற்கொள்ள வேண்டியிருப்பது பொருளாதார பிரச்சனை காரணமாக வேலைகளிற்கு பெண்கள் செல்லும்போது பிள்ளைகளை பராமரிப்பதில் உள்ள பிரச்சனை. முன் குழந்தை பருவம் தொடர்பாக நாட்டில் கொள்கை உருவாக்கப்படவில்லை என்பதுடன் பாடசாலை முடிவடைந்த பின்னர் பிள்ளைகளை பராமரிப்பது தொடர்பான செயல்முறை உருவாக்கப்படல் வேண்டும்.

வட்டமேசை கலந்துரையாடலில் பங்குகொண்ட பெண்கள் தெரிவித்த ஒட்டுமொத்தமான கருத்தாகக் சகல மாகாணங்களிலும் சகல துறைகளிலும் பெண்கள் முகங்கொடுக்கின்ற பொது பிரச்சனைகள் மற்றும் சவால்கள் கீழ்காணப்படுபவையாகும்.

அ) கிராமிய மற்றும் சுய தொழில் துறைக்காக அரசாங்கத்தினால் வழுங்கப்படும் வளங்களை பகிர்வதில் மோசடி மற்றும் அரசியல் தலையீடு காணப்படல்.

ஆ) உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதற்கு நிரந்தரமான மற்றும் முறையான சந்தைகள் இல்லாமை

இ) மூலப்பொருட்களின் விலை அதிகமாக உள்ளதுடன் மூலப்பொட்களிற்கான தட்டுப்பாடு

ஈ) முறைசாரா பொருளாதார துறைக்காக கடன் பெற்றுக்கொள்வதிலுள்ள சிரமங்கள், அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தும் கடன் வசதிகளினை அனுக இயலாமை, பெற்றுக்கொண்ட கடனை முகாமைத்துவம் செய்வதில் அனுபவமின்மை மற்றும் நுண்கடன் வழங்கும் நிறுவனங்களை மேற்பார்வை செய்வதற்கு அரசாங்கத்தினால் முறையான செயற்திட்டங்கள் இன்மை

உ) மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்தி பொருட்களை கொண்டு செல்வதற்கான போக்குவரத்து செலவுகள் அதிகம்

ஊ) முறைசாரா பொருளாதார துறையிலுள்ள பெண்கள் வலைமைப்பு உருவாக்கப்படல் அல்லது குறைந்தபட்சம் சங்கமாவது நடாத்துதல் உதாரணம்:- கூட்டுறவு சங்கம் அமைக்கப்படாமை

எ) நவீன தொழில்நுட்பங்களை பாவிப்பது சம்பந்தமாக அறிவின்மை, திறன் விருத்திக்காக விழிப்புணர்வூட்டல் மற்றும் பயிற்சி நிகழ்வுகளை நடாத்துதல் மற்றும் இந்த பெண்களை வலுவூட்டுவதற்காக பிரதேச, மாவட்ட அல்லது தேசியளவில் மேற்கொள்ளல்

ஏ) வர்த்தக சம்பந்தமாக தீர்மானம் எடுக்கும்போது, மூலப்பொருட்களை பெற்றுக்கொள்ளும்போது, தேசிய சந்தை கொள்கையை முகாமைத்துவம் செய்யும்போது, வர்த்தக உடன்படிக்கைகளை தயாரிக்கும்போது மற்றும் இந்த துறைகளிலுள்ள பிரச்சினைகளை ஆராயும்போதும் பெண்கள் பங்களிப்பு மிகக்குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது

ஒ) தேசிய வரவு செலவுத்திட்டத்தின்போது முறைசாரா பொருளாதார துறைக்கு முறையான ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை

ஓ) இலங்கையில் வர்த்தக கொள்கை முறைசாரா பொருளாதார துறையிலுள்ள பெண்களின் தேவையின் அடிப்படையில் தயாரிக்கப்படவில்லை

ஔ) தேசியளவில் முறைசாரா பொருளாதார துறையிலுள்ள பெண்களை வலுவூட்டுதல் தொடர்பில் அவதானம் செலுத்தப்படவில்லை.

அஅ) தாய் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடும்போது பிள்ளைகளை பராமரிப்பதற்கு போதுமான மற்றும் முறையான பகல் பராமரிப்பு மத்தியநிலையங்கள் இன்மை

அஆ) விலை குறைந்த வெளிநாட்டு இறக்குமதியின காரணமாக முறைசாரா பொருளாதார துறையின் உற்பத்தி பொருட்களிற்கான சந்தை குறைவாக இடம் பெறுவதுடன் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதில் சிரமங்கள்

அஇ) கொள்கை வகுப்பாக்கங்களின்போது கிராமிய அல்லது முறைசாரா பொருளாதார துறையைச் சேர்ந்த பெண்களின் பங்களிப்பை கவனத்திற்கொள்ளாமை

அஈ) காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தில் பெண்களிற்கான பாரபட்சம் காட்டப்படுகின்றமை

அஉ) குடும்ப தலைவராக அரசாங்க உத்தியோகத்தர்களால் கணவரே கருதப்படுவதினால் விவசாயம் செய்யம்போது மற்றும் நிவாரணம் வழங்கும்போதும் விவசாயம் செய்யும் பெண்களின் பங்களிப்பு கவனத்திற்கொள்ளப்படாமை

அஊ) தோட்டத்துறை பெண்களின் அடிப்படை சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் சமனற்ற முறையில் மேற்கொள்ளல்

அஎ) தோட்டதொழிற்துறையிலுள்ள சட்டம் மற்றும் ஒழுங்குகள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை

அஏ) தொழில் திணைக்களம் தோட்டத்துறை சம்பந்தமாக எதுவித அவதானமும் செலுத்தவதில்லை

அஒ)அரசாங்க உத்தியோகத்தர்களிற்கிடையே தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் தொடர்பாக தொடர்பாடல் இன்மை

அ௵) தொழிற்சங்கங்கள் கட்சி அரசியலுக்குள் செல்லுதல்

அ௵ள)தோட்டத்துறையுடன் சம்பந்தமான தொழிலாளரிற்கு ஏற்புடையதான புதிய சட்டங்கள் தயாரிக்கப்படவில்லை

முறைசாரா பொருளாதார துறையினா் இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்தபோதும் மேலும் இதனை விருத்தி செய்யவும் இப்பிரச்சனைகளை தீா்பதற்கும் உரிய அரச அதிகாரவமைப்புக்களிற்கு பரிந்துரை வழங்க இந்நிகழ்சியின் மூலம் எதிா்பாா்க்கப்படுகின்றது. எனவே இப்பரிந்துரை தொடா்பில் அவதானம் செலுத்துதல் பொருத்தமானதாக அமையும்.

**4.0 இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் பரிந்துரைகள்**

1996 ஆம் ஆண்டின் 21 இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவுகள் 10 மற்றும் 11 இற்கு அமைய உரித்தான அதிகாரத்தின் கீழ் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் கீழ்குறிப்பிடப்பட்ட பிரதான பரிந்துரைகள் வழங்கப்படுகின்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதை மேற்பார்வை செய்வதுடன் அப்பரிந்துரைகள் மீறப்படுமாயின் அது சம்பந்தமாக முறைப்பாடு செய்வதற்கு குறித்த மீறலிற்கு முகங்கொடுக்கின்ற நபரிற்கு இயலும் என்பதுடன் அம்மீறல் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச்சட்டத்தின் 14 இற்க அமைய முறைப்பாட்டினை விசாரணை செய்யவும் முடியும்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் பெண்களிற்கு எதிராக இடம்பெறுகின்ற பாரபட்சத்தினை கருத்திற்கொண்டு அவற்றை இல்லாதொழிப்பதற்காக வழங்கப்படும் பரிந்துரைகளாகும். இந்த பரிந்துரைகளை வழங்குதலானது இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 12(2) [1] அத்துடன் பெண்களிற்கெதிரான அனைத்து விதமான பாரபட்சங்களையும் இல்லதொழிக்கும் சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 1[2] இன் அடிப்படையிலாகும்.

1. பெண்கள் தொடர்பாக கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுக்கும்போது மற்றும் கொள்கையை தயாரிக்கும்யோது குறிப்பிட்ட துறையை பிரதிநிதித்துவம் செய்யும் பெண்களை அது சம்பந்தமாக எவ்வேளையிலும் பங்களிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த செயற்பாடு தொடர்பாக குறித்த அரசாங்க நிறுவனத்தினால் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் கண்கானிப்பை சிறுவர் மற்றும் பெண்கள் விவகார அமைச்சு மேற்கொள்ள வேண்டும். உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊடாக இப்பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படின் மாகாண பெண்கள் விவகார அமைச்சினால் கண்காணிக்கப்படல் வேண்டும்.

[1]இனம், மதம், மொழி, சாதி, பால, அரசியற்கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்று காரணமாகவும் எந்த பிரசைகளக்கம் ஓரங்காட்டுதல் ஆகாது.

[2]தற்போதைய சமவாயத்தின் நோக்கங்களக்காக,“ பெண்களுக்க எதிரான ஓரங்காட்டுதல்” என்னும் பதம் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார, குடியியல் அல்லது ஏதேனும் துறையில் ஆணுக்கு பெண் சமம் என்ற அடிப்படையில், பெண்கள் அவர்கள்து விவாக அந்தஸ்து எப்படியிருப்பினும், மனித உரிமைகளையும் அடிப்படைச்சுதந்திரங்களையும் ஏற்றங்கீகரிப்பதை, துய்ப்பதை அல்லது பிரயோகிப்பதைப் பயனற்றதாக்கும் அல்லது வலுக்கொடுக்கும் பயன் அல்லது நோக்கம் கொண்டதும், பால் ரீதியான ஏதேனும் வேறுபாடு, விலக்கிவைத்தல் அல்லது மட்டுப்பாடு எனப்பொருள்படுதல் வேண்டும்.

2. விவாசாய பிரதேசங்களிற்கு மற்றும் முறைசாரா பொருளாதாரதுறைக்கு கடன் வழங்கும்போது சரியான கடன் முகாமைத்துவம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்த, கடன் வழங்கும் தேசிய கொள்கையை பெண்கள் பிரதிநிதித்துவத்துடன் தயரிப்பதுடன் நுண்கடன் வழங்கும் போதுள்ள முன்வைப்புக்கள் மற்றும் அந்நிறுவனங்களை மேற்பார்வை செய்வதற்கு, அது தொடர்பான கெள்கையொன்றை தயாரிக்க இலங்கை மத்திய வங்கி மற்றும் அனைத்து கடன் வழங்கும் அரச மற்றும் தனியார் வங்கிகள் உட்பட நிதிநிறுவனங்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3. முறைசாரா பொருளாதாரதுறை அதேபோல முறைசார் பொருளாதார துறையிலுள்ள பெண்களின் பிள்ளைகளை பராமரிப்பது தொடர்பாக முறையான பகல் பராமரிப்பு நிலைய வலைப்பின்னலினை தாபிப்பதற்குரிய முறைமையை உருவாக்கல் மற்றும் அவை தாபிக்கப்படும்போது சிறுவர் மற்றும் பெண்கள் விவகார அமைச்சு, சமூகவலுவூட்டல் மற்றும் சமூக நலன்புரி மற்றும் கண்டிய மரபுரிமை அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் சகல மாகாண அமைச்சுக்களினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

4. முறைசாரா பொருளாதார துறை சம்பந்தமாக திறனை விருத்தி செய்ய முறையான பயிற்சி நடவடிக்கை மற்றும் நவீன தொழில்நுட்ப அறிவை பெற்றக்கொள்ள திறன்விருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சு, தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சு, ஆரம்ப கைத்தொழில் அமைச்சு, கிராமிய பொருளாதார விவகார அமைச்சு, விவசாய அமைச்சு, தொழில் அமைச்சு மற்றும் சகல மாகாண சபைகளின் கிராமிய அபிவிருத்தி, தொழில் நுட்பம், பொருளாதார அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சுகளினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இதன்போது சந்தைப்படுத்தல், சந்தை விளம்பரப்படுத்தல் மற்றும் சந்தைகளை கண்டறிதல் சம்பந்தமாக அவதானத்தை செலுத்துதல் வேண்டும்.

5. முறைசாரா பொருளாதார துறையில் இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட சேவைகள் எந்தவொரு வேறுபாடுகளிமின்றி விநியோகித்தல் மற்றும் முறைசாரா பொருளாதாரதுறைப்பெண் தொழிலாளிகளின் தற்போதைய தேவைகளை அறிந்து தேவையான வசதிகளை வழங்குவது சம்பந்தமாக புதிய கொள்கைகள் மற்றும் செயற்பாடுகளை தயாரித்தல் சிறுவர் மற்றும் பெண்கள் விவகார அமைச்சு மற்றும் நீதி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சு, ஆரம்ப கைத்தொழில் அமைச்சு, கிராமிய பொருளாதார விவகார அமைச்சு மற்றும் சகல மாகாண சபைகளின் கிராமிய அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சு ஆகியன நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

6. முறைசாரா பொருளாதார துறையிலுள்ள பெண்களின் வலையமைப்பை உருவாக்கல் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் போன்ற அமைப்புக்களினூடாக நிறுவனமயப்படுத்த நடவடிக்கை எடுத்தல். சிறுவர் மற்றும் பெண்கள் விவகார அமைச்சு, கூட்டுறவு விவகார அமைச்சு, தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சு, ஆரம்ப கைத்தொழில் அமைச்சு, கிராமிய பொருளாதார விவகார அமைச்சு மற்றும் சகல மாகாண சபைகளின் கிராமிய அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி, கூட்டுறவு மற்றும் பெண்கள் விவகார அமைச்சுக்களின் ஊடாக ஏற்படுத்தல் வேண்டும்.

7. பெண்களிற்கு பாரபட்சம் ஏற்படுத்துகின்ற சட்டம் மற்றும் கொள்கையை திருத்தம் செய்தல். இதன்போது காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டம் பெண்களிற்கு நன்மை பயக்கும் திருத்தத்தை சேர்த்துகொள்வதற்கு நீதி அமைச்சு மற்றும் காணி அமைச்சுக்கு பரிந்துரைப்பதுடன் தோட்ட தொழிலாளிகளின் சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளிலுள்ள மோசடிகளை இல்லாது செய்ய தொழிலாளர் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சுக்கு பரிந்துரை செய்யப்படுகின்றது.

8. புதிய அரசியலமைப்பு சீர்திருத்த செயன்முறையில் பெண்கள் பாரபட்சத்துக்குள்ளாக்கப்படுதலுக்கு எதிராக பிரசித்த ஏற்பாடுகள் அரசியலமைப்பில் உள்ளடக்கப்படல் அதேபோல கடந்த பல தசாப்தங்களாக கலந்துரையாடப்பட்ட பெண்கள் உரிமைக்கான சட்டநகல் பெண்களிற்கு எதிராக பாரபட்சங்களை இல்லாதொழிக்கும் சர்வதேச சமவாய வரம்பின் அடிப்படையில் இயற்றப்படவேண்டும். இதுதொடர்பாக அரசியலமைப்பு பேரவை, சிறுவர் மற்றும் பெண்கள் விவகார அமைச்சு மற்றும் நீதி அமைச்சு தேவையான நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

இணைப்பு I

## இலங்கையில் பெண் தொழிற்படையின் பங்களிப்பு

இலங்கை தற்பொழுது தெற்காசியாவில் அமைந்துள்ள ஒரு நாடென்ற வகையில் முன்பிருந்த பொருளாதார நிலைமைகளை விட தற்பொழுது போதியளவு வளர்ச்சி பெற முடியுமாயுள்ளது. அதன்படி, இலங்கையில் நடைபெற்ற முப்பது வருட யுத்த நிலைமையினால் சரிந்திருந்த இலங்கையின் பொருளாதார நிலை விரைவான வளர்ச்சியொன்றை பெற்றுக் கொள்வதற்கு 2017ம் ஆண்டளவில் இலங்கை அதற்குரிய தகுதியைக் கொண்டுள்ளது. உல்லாசப் பிரயாணம், தேயிலை ஏற்றுமதி, தைத்த ஆடைகள், அரிசி உற்பத்தி மற்றும் விவசாயம் ஆகியவைகள் இலங்கையின் முக்கிய பொருளாதாரங்களாக அமைந்துள்ளன.

இலங்கையின் தொழிற்படைக்கு சனத்தொகை வழங்கும் பங்களிப்பின் எண்ணிக்கைக்கேற்ப 2011லிருந்து 2017ம் ஆண்டின் முதலாவது காலாண்டு வரையிலான விகிதாசாரத்தை ஆண், பெண் எனும் பிரிவில் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம். எனினும், ஒவ்வொரு வருடத்திலும் (2011 - 2017 முதலாவது காலாண்டு வரை) ஆண்களின் தொழிற் பங்களிப்பு, பெண்களின் தொழிற் பங்களிப்பை விட கூடுதலான மதிப்பீட்டைக் கொண்டுள்ளதென்பதை தெளிவாக அறியக் கூடியதாய் உள்ளது.

<u>இலங்கையின் தொழிற்படைக்கு பங்களிப்பு வழங்கும் பெண்கள் மற்றும் ஆண்களின் விகிதாசாரம்</u>

| வருடம் | மொத்த சனத்தொகையில் தொழிற்படையின் விகிதாசாரம் | ஆண் (%) | பெண் (%) |
|---|---|---|---|
| 2011 | 52.9 | 74.0 | 34.3 |
| 2012 | 52.5 | 74.9 | 32.9 |
| 2013 | 53.7 | 74.9 | 35.4 |
| 2014 | 53.2 | 74.6 | 34.6 |
| 2015 | 53.8 | 74.7 | 35.9 |
| 2016 | 54.1 | 75.1 | 36.0 |
| 2014 Q1 | 53.4 | 74.4 | 35.3 |
| 2015 Q1 | 53.5 | 73.8 | 36.3 |
| 2016 Q1 | 54.1 | 75.5 | 36.3 |
| 2017 Q1 | 54.7 | 75.1 | 37.6 |

மூலம்: இலங்கை தொழிற்படையைப் பற்றிய மதிப்பீடு – 2017

(தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்)

மேலுள்ள அட்டவணையை கவனத்திற் கொள்ளும்போது, இலங்கை சனத்தொகையில் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் ஒவ்வொரு ஆண்டும் தொழிற்படைக்குள் செயலாற்றியுள்ளனர் எனும் விடயத்தை தெளிவாகக் காணலாம். இத்தொழிற்படைக்குள் பெண்கள் மற்றும் ஆண்களின் விகிதாசார அளவு அதன் பின்னரும் காணக் கூடியதாக உள்ளது. பொதுவாக நோக்குமிடத்து, தொழிற்படைக்கு பங்களிப்பு வழங்கும் பெண்களின் விகிதாசாரத்தைப் போல் இருமடங்கு ஆண்களின் விகிதாசாரம் அமைந்திருப்பதை ஒவ்வொரு வருடமும் காணக் கூடியதாக உள்ளது. எனினும், 2014ம் ஆண்டிலிருந்து பெண்களின் தொழிற்படைப் பங்களிப்பு தொடர்ச்சியான வளர்ச்சியொன்றைக் காணக் கூடியதாய் இருக்கின்றது.

இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் 2009ம் ஆண்டின் தரவுகளுக்கேற்ப ஒவ்வொரு பிரிவும் பின்வருமாறு அமைந்துள்ளன.

விவசாயம் - 32.7%

கைத்தொழில் - 26.3%

ஏனைய சேவைகள் - 58% வீதமாக அமைந்துள்ளன.


2015ம் ஆண்டின் மதிப்பீடுகளுக்கேற்ப இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தி 4.79% வீத அதிகரிப்பொன்றைக் காட்டியுள்ளது.

இலங்கை ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடென்ற முறையில் இலங்கையில் நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான விசேட ஆர்வத்தைக் கொண்டுள்ளது. அதன்படி, இலங்கையில் நிலையான அபிவிருத்தி எனும் நிலையை அடைவதற்கு இலங்கையின் தொழிற்படை ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றது. இவ்விடத்தில் இலங்கையின் தொழிற்படையைப் பற்றி ஒப்பீட்டளவில் ஆய்வு செய்தால் அதன் வளர்ச்சியில் அளவு மற்றும் தரம் சார்ந்த வளர்ச்சியொன்றைக் காண முடியும். அதன்படி, இலங்கையின் தொழிற்படை 2017ம் ஆண்டின் முதலாவது காலாண்டில் 54.7 வீதமாகும். கணக்கீட்டின்படி, இலங்கையின் மனை சேவையில் 15 வருடத்திற்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கை 2017ம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 15.7 மில்லியனாக காணக் கிடைப்பதோடு, 2016ம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பாரக்கும்போது அது 0.3 மில்லியன் அதிகரிப்பைக் காட்டுகிறது. 2017ம் ஆண்டின் முதலாவது காலாண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்படி இலங்கையில் பொருளாதார ரீதியாக செயலாற்றுபவர்களின் எண்ணிக்கை 8.6 மில்லியனாகும். அதில் 62.7% ஆண்களாகவும் 37.3% பெண்களௌனவும் வேறுபடுத்தலாம். இலங்கையில் பொருளாதார ரீதியாகச் செயற்படுபவர்களின் எண்ணிக்கையை நகர்ப்புற, கிராமிய, தோட்டக் கைத்தொழில் சாரந்ததாக நோக்குவோமேயானால் அவ்வெண்ணிக்கை பின்வருமாறு அமையும்.

| பிரிவு | பொருளாதார ரீதியாக இயங்கும் மக்கள் தொகை | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | % | ஆண் | % | பெண் | % |
| இலங்கை | 8,583,082 | 100.0 | 5,381,244 | 62.7 | 3,201,838 | 37.3 |
| நகர்ப்புற | 1,417,031 | 100.0 | 914,609 | 64.5 | 502,423 | 35.5 |
| கிராமிய | 6,732,711 | 100.0 | 4,241,120 | 63.0 | 2,491,591 | 37.0 |
| தோட்டப் பயிர்ச் செய்கை | 433,340 | 100.0 | 225,516 | 52.0 | 207,824 | 48.0 |

மூலம்: இலங்கை தொழிற்படை மதிப்பீடு – 2017 முதலாவது காலாண்டு அறிக்கை

தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்




மூலம்: இலங்கை தொழிற்படை மதிப்பீடு – 2017 முதலாவது காலாண்டு அறிக்கை

தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

இலங்கையின் தொழிற்படையின் பங்களிப்பு தொடர்பாக 2017ம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் பல்வேறு துறைகளை ஆய்வு செய்தால் விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் ஆகிய துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை பின்வரும் அட்டவணைக்கேற்ப உறுதிப்படுத்தப்படுகிறது. இதன்மூலம் 2017ம் ஆண்டின் முதலாவது மற்றும் இரண்டாவது காலாண்டு விபரிக்கப்படுகிறது. 2017ம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் தொழிற் துறையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 8.1 மில்லியனாக இருந்ததோடு, இதில் 45.7% பல்வேறு சேவைத் துறைகளிலும் 28.3% வீதம் பல்வேறு கைத்தொழில் துறைகளிலும் 26.0% விவசாயத்திலும் ஈடுபட்டுள்ளவர்களாவர்.

| காலாண்டு | இலங்கை | | பிரதான சேவைத் துறைகள் | |
|---|---|---|---|---|
| | | விவசாயம் | சேவைத் துறை | கைத்தொழில் |
| 2017 Q1 | 8,230,207 | 2,221,761 | 2,306,398 | 3,702,049 |
| 2017 Q2 | 8,138,728 | 2,114, 336 | 2,301,377 | 3,723,015 |

மூலம்: இலங்கை தொழிற்படை மதிப்பீடு – 2017 முதலாவது மற்றும் இரண்டாம் காலாண்டு அறிக்கை

(தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்)

இலங்கையில் விவசாய, கைத்தொழில் மற்றும் சேவைத் துறைககளில் ஈடுபட்டுள்ள சனத்தொகை ஆண் மற்றும் பெண் எனும் வகையில் நோக்குவோமேயானால் அதில் அதிகமானோர் சேவைத் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் என்பது தெளிவாகின்றது. அதன்படி, இதில் விவசாய நடவடிக்கைகளுக்காக பெண்களின் தொழிற் பங்களிப்பு 28.8% வீதாமாக இருந்ததோடு, பல்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ள பெண்களின் தொழிற் பங்களிப்பு 27.4 வீதமாகும். மேலும், ஏனைய சேவைகளில் ஈடுபட்டுள்ள பெண்களின் தொழிற் பங்களிப்பு 43.9% வீதமாகும்.

| பிரதான கைத்தொழிற் துறை | இலங்கை | பால்நிலை | |
|---|---|---|---|
| | | ஆண் | பெண் |
| இலங்கை | 100.0 | 100.0 | 100.0 |
| விவசாயம் | 26.0 | 24.5 | 28.8 |
| கைத்தொழில் | 28.3 | 28.7 | 27.4 |
| ஏனைய சேவைகள் | 45.7 | 46.7 | 43.9 |

மூலம்: இலங்கை தொழிற்படை மதிப்பீடு – 2017 முதலாவது காலாண்டு அறிக்கை

தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

இலங்கையில் பெண் சனத்தொகை மற்றும் ஆண் சனத்தொகை என வேறுபடுத்தி நோக்குமிடத்து அவைகளில் பல்வேறு தொழிற் துறைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 2015ம் ஆண்டு தரவுகளுக்கேற்ப பின்வருமாறு காட்டலாம். அதில் அதிகாரபூர்வமற்ற தொழில்களில் ஈடுபட்டுள்ள அதாவது, கைவினைத் தொழில் மற்றும் ஏனைய கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள ஊழியர்களில் 34.9% வீதம் பெண் தொழிலாளிகள் என்பது தெளிவாகின்றது. முகாமைத்துவ சேவைகள், சட்டவாக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பெண்களின் பங்களிப்பு 25.9% வீதமாகும். பல்வேறு தொழிற்துறைகளில் ஈடுபட்டுள்ள பெண்களின் பங்களிப்பு 65.8% வீதமாகும். தொழிநுட்ப சேவைகளிலுள்ள தொழிற் பெறுனர்களில் பெண்களின் பங்களிப்பு 32.2% வீதமாக இருப்பதோடு, லிகிதர்களாக சேவை செய்யும் தொழிற் பெறுனர்களில் பெண்களின் பங்களிப்பு 33.8% வீதமாகும். விற்பனை உதவியாளர்களாக சேவை செய்யும் தொழிற் பெறுனர்களில் பெண்களின் பங்களிப்பு 31.3% வீதமாகும். விவசாயம், கடற் தொழில் சாரந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்களின் பங்களிப்பு 33.8% வீதமாகும். மேலும், கைவினைத்துறை சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிற் பெறுனர்களில் பெண்களின் பங்களிப்பு 34.2% வீதமாகும். தோட்டம் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்களின் பங்களிப்பு 14.3% வீதமாக இருப்பதோடு, ஆரம்ப தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்களின் பங்களிப்பு 37.7% வீதமாகும். இராணுவ சேவையில் ஈடுபட்டுள்ள பெண்களின் பங்களிப்பு 12.6% வீதமென காணப்படுகின்றது.

| தொழில் | மொத்தம் | பால் | | பெண்களின் மொத்தப் பங்களிப்பு |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | |
| மொத்தம் | 100.0 | 100.0 | 100.0 | 34.9 |
| முகாமைத்துவ சேவை, சட்டமியற்றும் நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு தொழில்கள் | 6.1 | 7.0 | 4.6 | 25.9 |
| தொழிநுட்ப சேவைகள் | 6.0 | 6.3 | 5.6 | 32.3 |
| லிகிதர்கள் | 4.0 | 2.9 | 5.9 | 51.8 |
| விற்பனை உதவியாளர்கள் | 10.9 | 11.5 | 9.8 | 31.3 |
| விவசாயம், கடற் சார்ந்த தொழில்கள் | 18.6 | 18.9 | 18.0 | 33.8 |
| கைவினை கைத்தொழில் சார்ந்த | 16.2 | 16.3 | 15.8 | 34.2 |
| தோட்டம் சாரந்த தொழில்கள் | 8.6 | 11.3 | 3.5 | 14.3 |
| ஆரம்பத் தொழில்கள் | 22.6 | 21.6 | 24.3 | 37.7 |
| இராணுவ சேவை | 0.5 | 0.7 | 0.2 | 12.6 |

மூலம்: இலங்கை தொழிற்படை மதிப்பீடு - ஆண்டறிக்கை 2015
(தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்)

2017ம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் வேலைவாய்ப்பற்றவர்களின் முழுத்தொகையையும் கவனத்திற் கொள்ளும்போது அது 380,594 ஆக அமைந்திருந்தது. 2017ம் ஆண்டின் முதலாம் காலாண்டின் தரவுகளின்படி வேலைவாய்ப்பற்றவர்களின் எண்ணிக்கை 4.5% வீதமென காட்டுகின்றது. 2017ம் ஆண்டின் இரண்டாம் காலாண்டை நோக்குமிடத்து வேலை வாய்ப்பற்ற சனத்தொகையில் 7.1 வீதம் பெண்களாய் இருப்பதோடு 3.0% ஆண்களாவர். வேலை வாய்ப்பற்ற இளைஞர் சனத்தொகையின்படி 2017ம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் இத்தொகை 20.0% வீதமாகும். தரவுகளின்படி தொழிலற்ற ஆண் சனத்தொகையை ஒப்பிடும்போது தொழில் வாய்ப்பற்ற பெண்களின் சனத்தொகை பெரிதாகக் காணப்படுகின்றது. அதன்படி தொழிலற்ற பெண் சனத்தொகையில் வேலை வாய்ப்பற்ற யுவதிகளின் சனத்தொகை கூடிய மதிப்பீட்டை கொண்டுள்ளதென இத்தரவுகளின்படி அறியலாம்.

| வயதெல்லை (ஆண்டுகள்) | இலங்கை | வேலை வாய்ப்பற்றவர்களின் விகிதாசாரம் | | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | இலங்கை | பால் நிலை | |
| | | வேலை வாய்ப்பற்றவர்களின் விகிதாசாரம் | பெண் | ஆண் |
| இலங்கை | 380,594 | 4.5 | 3.0 | 7.1 |
| 15 – 24 | 190,685 | 20.0 | 14.8 | 29.1 |
| 25 – 29 | 96,763 | 11.3 | 7.7 | 17.0 |
| 30ற்கு மேல் | 93,146 | 1.4 | 0.8 | 2.4 |

மூலம்: இலங்கை தொழிற்படை மதிப்பீடு - ஆண்டறிக்கை 2015
(தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்)

கல்வித் தகைமைகளுக்கேற்ப இலங்கையில் வேலை வாய்ப்பற்ற நிலையை கருத்திற் கொள்ளும்போது அதிக வேலை வாய்ப்பற்ற எண்ணிக்கை பொதுக் கல்வி தராதரப் பத்திரப் பரீட்சை சித்தியடைந்நதவர்களில் 8.2% வீதமாகக் காணப்படுகின்றது. அதன்படி 5.0% வீதம் ஆண்களாக இருப்பதோடு 11.9% பெண்களாவர்.

| கல்வி மட்டம் | இலங்கை | தொழில் வாய்ப்பற்றவர்களின் விகிதாசாரம் | | |
|---|---|---|---|---|
| | | இலங்கை | பால்நிலை | |
| | எண்ணிக்கை | தொழில் வாய்ப்பற்றவர்களின் விகிதாசாரம் | ஆண் | பெண் |
| இலங்கை | 380,594 | 4.5 | 3.0 | 7.1 |
| க.பொ.த.(சாதாரண தரத்திற்கு) கீழ் | 144,924 | 2.7 | 2.0 | 4.3 |
| க.பொ.த.(சாதாரண தரம்) சித்தியடைந்த | 87,161 | 6.0 | 4.9 | 8.3 |
| க.பொ.த.(உயர் தரம்) மற்றும் அதற்கு மேல் | 148,509 | 8.2 | 5.0 | 11.8 |

மூலம்: இலங்கை தொழிற்படை மதிப்பீடு – 2017ம் ஆண்டின் இரண்டாம் காலாண்டு அறிக்கை
(தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்)

அதன்படி, இலங்கையில் பெண்களின் தொழிற் பங்களிப்பு ஆண்களின் தொழிற் பங்களிப்பை விட குறைவாய் இருப்பதை அவதானிக்கலாம். அதேபோன்று, இலங்கை உறுதியான அபிவிருத்தியை நோக்கி பயணிக்கும்போது இச்செல்தடம் பொருத்தமற்றதாய் காணப்படுகிறது.

இணைப்பு II

சர்வதேச பெண்கள் தின வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டவர்கள்

| பெயர் | பதவி மற்றும் நிறுவனம் |
|---|---|
| எஸ்.ஆர். நிலுாகா பெரேரா | புனித நல்லாயர் கல்லுாரி |
| நுார் ரிஸ்னா அனீஸ் | வெளிவாரி வளங்கள் பற்றிய திணைக்களம் |
| ஏபி.கே.திஸாரி | தாபிந்து கலெக்டிவ் |
| ரோசினி வீரசிங்ஹ | தாபிந்து கலெக்டிவ் |
| பிம்சானி ஆரச்சி | பொலிஸ் திணைக்களம் |
| சு.்.டே. விஜேதோறு | இலங்கை கடற்படை |
| ஏ.கே.குணசேகர | தேசிய திட்டமிடல் திணைக்களம் |
| ஏ.என்.ஆர்.வீரசேகர | பதிற்பணி பணிப்பாளர், வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சு |
| சுரேகா டயஸ் | பணிப்பாளர் (சட்டம்),இலங்கை வான்படை |
| எல்.கே.எல்.வை.லேகம்வசம் | இலங்கை வான்படை |
| ஆர்.எம்.வை.ரத்னாயக்க | மேலதிக செயலாளர், மக்கள் நிர்வாகம் பற்றிய அமைச்சு |
| S.H.A.N.D. ஆரியரத்ன | தபால், தபால் சேவைகள், இஸ்லாம் மதம் பற்றிய அமைச்சு |
| ஒ.டி.என்.முனசிங்ஹ | இலங்கை இராணுவம் |
| டபிள்யு.ஏ.பி.வெல்லப்புலி | பணிப்பாளர்,பாராளுமன்ற சீர்திருத்தம் மற்றும் ஊடக அமைச்சு |
| சஜீவனி அபேகோன் | சட்ட அதிகாரி, சட்ட உதவி ஆணையகம் |
| எஸ்.பி.நவரத்ன | உதவி ஆணையாளர்,தொழிற் திணைக்களம் |
| ஹெயின்ஸ் வோக்கர் நெடர்கோன் | துாதுவர்,சுவீடன் துாதரகம் |
| பிரியந்தி பெரேரா | கொமர்ஷல் வங்கி |
| எஸ்.எம்.பி.கே.வீரசேகர | உதவி ஆணையாளர்,கமநலசேவை திணைக்களம் |
| சமந்தி பண்டார | பொலிஸ் கல்வி நிறுவனம் |
| ஆர்.பி.கஸ்துாரி ஆரச்சி | உதவி பணிப்பாளர்,விவசாய திணைக்களம், பேராதெனியா |
| வை.எம்.குணசிங்ஹா | உதவிப் பணிப்பாளர் (கல்வி),கல்வி அமைச்சு |
| ஹசினி ராஜரத்ன | இணைப்பாளர், மனித உரிமைகள் நிறுவனம் |
| திருமதி.டி.டி.எஸ்.தயாவங்ச | பணிப்பாளர்,பிரதேச அபிவிருத்திப் பிரிவு,இலங்கை மத்திய வங்கி |
| கே.டி.எஸ.பி.பெரேரா | உதவிப் பணிப்பாாளர்,சுகாதார அமைச்சு |
| மனோமி டி சில்வா | கருத்திட்ட உதவி அதிகாரி,(தொண்டர் சேவை),ஐக்கிய நாடுகள் சபை |
| விஜித்த செனவிரத்ன | மேலதிக செயலாளர்,சட்டம், சமாதானம் மற்றும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சு |
| தமித் சந்திமால் | போதனாசிரியர், இன்போர்ம் மனித உரிமைகள் ஆவண நிலயம் |
| டபிள்யு.எம்.ஏ.ஜி.பி.வன்னிநாயக | மேலதிக செயலாளர் |
| குணியோசி | யப்பானிய துாதரகம் |
| இஷானி மஹேஷா சமரதுங்க | சார்க் கலாசார நிலையம் |
| வி.வணிகசேகர | உதவிப் பணிப்பாளர்,உறுதியான அபிவிருத்தி மற்றும் வன அமைச்சு |
| எச்.சி.கண்ணங்கர | மிருக வைத்தியர்,கிராமியப் பொருளாதார அமைச்சு |
| வை.எல்லெபொல | பொலிஸ் கல்வி நிறுவனம் |
| பி.எல்.தீபானி பீயங்கா | உதவிப் பணிப்பாளர்,சிறைச்சாலை சீர்திருத்தம், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியமர்த்தல் அமைச்சு |
| என்.ஏ.ஆர்.நெத்தசிங்ஹா | அதிபர்,தாதிக் கல்லுாரி,கொழும்பு |

| | |
|---|---|
| என்.ஹபுகின்ன | உதவி ஆணையாளர்,காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம் |
| ஷெலீ வைட்டின் | தூதுவர்,கனேடிய தூதரகம் |
| குமுதினி சாமுவெல் | பெண்கள் மற்றும் ஊடக இணையம் |
| இஷானி அபேரத்ன | பணிப்பாளர் (வர்த்தகம்),கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு |
| திஸ்ஸ ஜயசிங்ஹா | சிறைச்சாலை ஆணையாளர் |
| பிரியந்த ஜயக்கொடி | மேலதிக பரிசோதகர் நாயகம்,இலங்கை பொலிஸ் |
| ரொஸான் த சில்வா | LGBTI செயற்பாட்டாளர்கள் |
| எச்.சி.டி.த. சொய்சா | சட்ட அதிகாரி,பெண்கள் மற்றும் சிறுவர் அமைச்சு |
| எஸ்.பாலசுப்ரமணியம் | மேலதிக செயலாளர்,சமூக வலுவூட்டல் அமைச்சு,நலன்புரி அமைச்சு |
| ஆர்.ஏ.பெரேரா | பணிப்பாளர்,சாதாரணக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு |
| கே.குணவர்தன | காணி அமைச்சு |
| எஸ்.வன்னியாரச்சி | குடும்பக் கட்டுப்பாட்டுச் சங்கம் |
| சாமர சம்பத் | ஈக்குவல் கிரவுண்ட்,கொழும்பு |
| பிரியாணி குமாரி | சட்ட உதவி ஆணையகம் |
| நதீ தர்மசிரி | சம்பத் வங்கி |
| எம்.பி.ரண்தெனியா | உதவிப் பொது முகாமையாளர்,வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் |
| செலோமி குணவர்தன | பணிப்பாளர் (ஊடகத் துறை),இலங்கை மத்திய வங்கி |
| கலாநிதி எஸ்.எம்.பி.சந்திரா பத்மினி | சிரேட்ட அதிகாரி,<br>விவசாய ஆராய்ச்சிக் கொள்கைப் பற்றிய இலங்கை சபை |
| எஸ்.சாமர | உதவி கருத்திட்ட அதிகாரி,ஈக்குவல் கிரவுண்ட் |
| கே.குமாரசிங்ஹா | உதவி ஆணையாளர்,கலால் திணைக்களம் |
| அமல்கா எதிரிசிங்ஹா | பணிப்பாளர் (வேலைதிட்டம்),குடும்ப புனர்வாழ்வு நிலையம் |
| சந்திரமாலி லியனகே | பணிப்பாளர்,தேசிய அருங்கலைகள் பேரவை |
| ரஜ்மி மனதுங்க | உதவிப் பணிப்பாளர், வெளி விவகார அமைச்சு |
| குமுதினி ஸ்ரீயாணி வெடிசிங்ஹ | பயிற்சி அதிகாரி,சமூக அபிவிருத்தி பற்றிய தேசிய நிறுவனம் |
| எம்.எஸ்.சமிந்து டி சில்வா | ஹெல்ப்பேஜ் ஸ்ரீ லங்கா |
| ஆர்.எம்.பி.ஜயதிஸ்ஸ | உதவிப் பொது முகாமையாளர், இலங்கை மரமுந்திரிகைகூட்டுத்தாபனம் |
| என்.ஏ.பி.நிஸ்ஸங்க | மேலதிக பணிப்பாளர்,சமூக வலுப்படுத்தல்,நலன்புரி அமைச்சு |
| ஏ.ஆர்.எம் பர்ஸான் | கருத்திட்ட உதவியாளர், தொழிலாளர் அமைப்பு |
| சுனிமலி மதுராவல | கருத்திட்ட அதிகாரி,பொலிஸ் பயிற்சி நிறுவனம் |
| மேனகா சண்முகலிங்கம் | முகாமையாளர்,மனித உரிமைகள் நிறுவனம் |
| அயுலி டி சில்வா | மேலதிக பணிப்பாளர் நாயகம், கருத்திட்ட மேற்பார்வை திணைக்களம் |
| தேனு ரண்கெத் | தலைவர்,வெனச அமைப்பு, கொழும்பு |
| வைத்தியர் ஜே.விதானபத்திரண | சுகாதார அமைச்சு |
| சஞ்சீவ கமகே | ஸ்டேண்டட் ஒப் மூமண்ட்,கொழும்பு |
| பூமி ஹரேந்திரன் | யங் அவுட் ஹியர்,கொழும்பு |
| பி.ஏ.தமயந்தி | உதவி நிர்வாக அதிகாரி,குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் |
| பி.எம்.வீரசூரிய | கல்விப் பணிப்பாளர் |
| என். பர்ணாந்து | சம்பத் வங்கி |
| கலாநிதி மல்லிகாந்தி | டி.ஏ.டி.சி.டி |
| ஜி.ஏ.ரசிகா பெரேரா | தொழில் மற்றும் தொழிற்சங்க தொடர்பாடல் அமைச்சு |
| சுலோச்சனா விஜயசிங்ஹா | (தொண்டர்) ஐக்கிய நாடுகள் சபை |

Printed by, **Horizon Printing (Pvt) Ltd.**

Printing Funded by

UNDP

සංවර්ධන සහයෝගිතාව
அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு
EU-Sri Lanka Development Cooperation

ශ්‍රී ලංකාවේ සාමය ගොඩනැගීම සඳහා උත්ප්‍රේරක සහය
இலங்கையில் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான ஊக்க உதவி
Catalytic Support to Peacebuilding in Sri Lanka